

578
03
T.18578

நல்ல தீர்ப்பு
அமைதி

பாவேந்தர்
பாரதிதாசன்

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கித் தெரு, சென்னை-600 001.

முதற் பதிப்பு: 1991 – டிசம்பர், 11.

உரிமை செறிவு

பதிப்பாசிரியர்:
டாக்டர் ச. மெய்யப்பன்

விலை ரூ.5-00

கிடைக்குமிடம்:
மணிவாசகர் நூலகம்

12–B, மேல சன்னதி,
சிதம்பரம் – 608 001.

55, லிங்கித் தெரு,
சென்னை – 600 001.

28–A, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை – 625 001.

15, ராஜ வீதி,
கோயமுத்தூர் – 641 001.

28, கிளைவ்ஸ் கட்டிடம்,
திருச்சி – 620 002.

தொலைபேசி :
சிதம்பரம் 2799 – சென்னை 513707

அச்சிட்டோர்: பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை–600 013.

T. 18578



பாவேந்தர்
பாரதிதாசன்
(1891-1964)

தமிழில் புதுவகை நாடகம்

முனைவர் ச. மெய்யப்பன்
அண்ணாமலைப்பல்கலைக் கழகம்

பாவேந்தர் புவிபோற்றும் புதுமைக் கவிஞர். புதியன படைப்பதில் தனித்திறம் சான்றவர் என்பதை அமைதி நாடகம் பறைசாற்றுகிறது. புதுமைக் கருத்துக்களை வாரி வழங்கும் கவிஞர், மிகப்புதிய நாடக அமைப்பினையும் படைத்துக் காண்பித்துத் தமிழ் நாடக உலகில் நிலைத்த பெரும் புகழ் பெற்றுவிட்டார். நாடகம், கூத்து என்றாலே உரையாடலும் பேச்சும்தான். கதை மாந்தர்களின் ஓயாப் பேச்சு; ஒழியாப்பேச்சு. உள்ளுணர்வுகளைப் புலப்படுத்தும் மெய்ப்பாடுகள் தோன்றவும் வெளிப்படவும் வாய்ப்பில்லாமல் போய்விடும். பேசா நாடகமாகிய அமைதியைப் படைத்துத் தமிழ் நாடக உலகில் ஒரு திருப்புமுனையை உருவாக்கி விட்டார். ஐரோப்பிய நாடுகளில் சிறந்து விளங்கும் ஊமை நாடகங்கள்போல் தமிழில் முதன் முதலில் பேசா நாடகம் படைத்த பெருமை பாவேந்தரையே சாரும். ஒலி இல்லாமல் கருத்தை உணர்த்தும் திறன் உயரிய திறன். பேச்சில்லாமல் செய்கையும், சைகையும் பாத்திரப் பண்புகளை விளக்கும் திறன் பாவேந்தரின் தனித்திறன். நிகழ்ச்சிகளின் அமைப்பும் செயல்களின் தொடர்பும் கதைமாந்தரின் மெய்ப்பாடுகளும் இந்நாடகத்திற்கு வலிமை சேர்க்கின்றன.

கதைத்தலைவன் தொண்டின் திருஉருவாய், தியாகச் சீலனாய் ஒளிர்கிறான். இயேசுவின் அருளறமும், புத்தரின் கருணை நெறியும், நாவுக்கரசரின் பணிசெய்து கிடக்கும் வழியும், வள்ளலாரின் வாடிய பயிரைக் கண்டபோது வாடும் நெஞ்சநெகிழ்ச்சியும் உயிர்க்குலத்திற்கு இரக்கங் காட்டும் ஒப்பற்ற பெருநெறியும் வாழ்வில் கடைப்பிடித்து உயர்ந்தவன். நாடகம் சிறிதாயினும் சிந்தனைச் செழுமைமிக்கது. புதியதோர் உலகங்காண விரும்பிய பாவேந்தர், நாடக உலகத்திற்குப் புதிய வடிவில் நாடகம்

படைத்துப் புதியதோர் துறைக்கு வித்திட்டுள்ளார். புதுமையும் புத்தார்வமும் புத்தாக்கமும் சிறக்க வழிவகுத்த பெருமைக்குரியவர், பாவேந்தர்.

அமைதி உள்ளக்குமுறல்களின் அமைதியான வெளிப்பாடு. பாத்திரங்கள் பேசாமலே பெருமை பெறுகின்றன. பாவேந்தர் எல்லாத் திறனாய்வாளர்களாலும் பெரிதும் போற்றிப் பேசப்படுகிறார்.

நல்ல தீர்ப்பு நாடும் மக்களும் விரும்பும் தீர்ப்பு. எல்லோரும் எதிர்நோக்கியிருக்கும் தீர்ப்பு. நிகழ்ச்சிகளுக்கும் சிக்கல்களுக்கும் சிறந்த தீர்வுதான் சமூக மாற்றத்திற்கும் சமுதாய வளர்ச்சிக்கும் அடிகோலுவன. நல்ல தீர்வுகளே நாட்டுக்கு நலம் பயப்பன. பாவேந்தர் வழங்கும் தீர்ப்பு எல்லோரும் ஏற்றுப்போற்றத்தக்க நல்ல தீர்ப்பு. 'சொல் புதிது, பொருள் புதிது, சுவை புதிது' என்னும் பாரதி வாக்கிற்கு இலக்கியமாய் அமைந்தவை அமைதியும் நல்லதீர்ப்பும்.

நல்ல தீர்ப்புக்கே நானிலம் தவம் கிடக்கிறது. நல்ல தீர்ப்பு கிடைத்ததும் மக்கள் குலம் மனநிறைவோடு மகிழ்ச்சி கொள்கிறது; அமைதி சிறக்கிறது.

பாவேந்தர் பாரதிதாசன் வாழ்க்கைக் குறிப்புகள்

1891 – ஏப்பிரல் 29, புதன் இரவு 10–15 மணிக்குப் புதுவையில் சுப்புரத்தினம் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி.

1895 – ஆசிரியர் திருப்புளிசாமி அய்யாவிடம் தொடக்கக் கல்வி. இளமையிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெறுதல்.

1908 – முதுபெரும் புலவர் பு.அ. பெரியசாமியிடமும், பின்னர் புலவர் பங்காரு பத்தரிடமும், தமிழ் இலக்கண– இலக்கியங்களையும், சித்தாந்த வேதாந்தப் பாடங்களையும் கற்றல். மாநிலத்திலேயே முதல் மாணவராகச் சிறப்புறல். புலவர் சுப்புரத்தினத்தை, வேணு நாயகர் வீட்டுத் திருமணத்தில் பாரதியார் காணல். பாரதியாரின் எளிய தமிழ் சுப்புரத்தினத்தைப் பற்றுதல்.

1909 – காரைக்கால் சார்ந்த நிரவியில் ஆசிரியர் பணி ஏற்றல்.

1918 – பாரதியாரின் சாதி மதம் கருதா, தெளிந்த உறுதியான கருத்துகளால் ஈர்ப்புற்றுத் தெய்வப் பாடல்களைப் பழகு தமிழில் எழுதுதல். புதுவை தமிழக ஏடுகளில் கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன் என்ற பெயர்களில், பாடல், கதை, கட்டுரை, மடல்கள் எழுதுதல். 10 ஆண்டுக்காலம் பாரதியார்க்கு உதவியும் உறுபொருள் கொடுத்தும் தோழனாய் இருத்தல்.

1919 – திருபுவனையில் ஆசிரியராக இருக்கையில் பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல்பட்டார் என்று குற்றம்சாட்டி 1 1/4 ஆண்டு சிறை பிடித்த அரசு, விடுதலை செய்தது. வேலை நீக்க வழக்கில் கவிஞர் வென்று பணியில் சேர்தல்.

1920 – இந்திய விடுதலை அறப்போராட்டத்தில் பங்கேற்றல். புவனகிரியைச் சேர்ந்த பெருமாத்தூர் பரதேசியார் மகள் பழனி அம்மையைத் திருமணம் செய்தல்.

1921 – பாரதியார் மறைவு (12.9.21)

1926 – ஸ்ரீமயிலம் சுப்ரமணியர் துதியமுது நூலை இயற்றல்.

1928 — நவம்பர் 3, கோபதி (மன்னர் மன்னன்) பிறப்பு.

1929 — 'குடியரசு', 'பகுத்தறிவு' ஏடுகளில், பாடல், கட்டுரை, கதை எழுதுதல். குடும்பக் கட்டுப்பாடு பற்றி இந்தியாவிலே பாட்டெழுதிய முதற் பாவலர்.

1930 — பாரதி, புதுவை வருகைக்கு முன்னும் பின்னும், பாடிய சிறுவர் சிறுமியர் தேசிய கீதம், தொண்டர் நடைப்பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு ஆகியவற்றை நூல் வடிவில் வெளியிடல். சஞ்சீவி பர்வதத்தின் சாரல், தாழ்த்தப்பட் டோர் சமத்துவப்பாட்டு நூல்களை வெளியிடல். டிசம்பர் 10இல் 'புதுவை முரசு' கிழமை ஏட்டின் ஆசிரியர் பொறுப் பேற்றல்.

1933 — மா. சிங்காரவேலர் தலைமையில் சென்னையில் நடந்த நாத்திகர் மாநாட்டின் பதிவேட்டில் 'நான் ஒரு நிரந்தர மான நாத்திகன்' என்று எழுதிக் கையெழுத்திடல்.

1934 — முழுநிலா இரவில் தோழர் ப. ஜீவானந்தம், குத்தூசி குருசாமி, குஞ்சிதம், மயிலை சீனிவேங்கட சாமி, மாயூரம் நடராசன், சாமி சிதம்பரனார், நாரண துரைக்கண்ண னுடன் படகில் மாமல்லபுரம் செல்லல். 'மாவலிபுரச் செலவு' பாடல் பிறந்தது.

1935 — இந்தியாவில் முதல் பாட்டேடான — 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' தொடக்கம். இதற்கு உறு துணையாக இருந்தவர் எஸ்.ஆர். சுப்பிரமணியம்.

1937 — புரட்சிக்கவி — குறுங்காவியம் வெளியிடல்.

1938 — பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியைக் கடலூர் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி, நாராயணசாமி நாயுடு ஆகியோர் பொருள் உதவியால் வெளியிடுதல். பெரியார் 'தன்மான இயக்கத்தின் சிறந்த பாவலர்' என்று பாராட்டுதல்.

1941 — எதிர்பாராத முத்தம் (குறுங்காவியம்.)

1942 — குடும்ப விளக்கு I வெளியிடுதல்.

1943 — பாண்டியன் பரிசு (காவியம்) வெளியிடல்.

1944 — இருண்ட வீடு, காதல் நினைவுகள், நல்ல தீர்ப்பு (நாடகம்), அழகின் சிரிப்பு ஆகிய நூல்களை ஒன்றன் பின் ஒன்றாய் வெளியிடல். குடும்ப விளக்கு II வெளியிடல். செட்டிநாடு

முழுவதும் இலக்கியச் சொற்பொழிவுகள் நடத்திப் பகுத்தறிவு இயக்கத்தைக் காலூன்றச் செய்தல்.

1945 – புதுவை, 95, பெருமாள் கோயில் தெரு வீட்டை வாங்குதல், தமிழியக்கம் (ஒரே இரவில் எழுதியது), எது இசை நூல்கள் வெளியிடல்.

1946 – 'முல்லை' இதழ் தொடங்கல். அமைதி – ஊமை நாடகம் வெளியிடல். (29.7.46) பாவேந்தர் 'புரட்சிக் கவி' என்று போற்றப்பட்டு ரூ.25000 கொண்ட பொற்கிழியைப் பெறுதல். நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னாடை போர்த்தல். அறிஞர் அண்ணா நிதி திரட்டித் தருதல்.

1947 – புதுக்கோட்டையிலிருந்து குயில் 1, 2 மாத வெளியீடு. '*சௌமியன்*' நாடக நூல், பாரதிதாசன் ஆத்திசூடி வெளியிடுதல். சென்னையில் 'குயில்', இசையமுது வெளியிடல்; புதுவையிலிருந்து 'குயில்' இதழ் ஆசிரியர் – வெளியிடுபவர். கவிஞர் பேசுகிறார் (சொற்பொழிவு நூல்.)

1948 – காதலா கடமையா? (காவியம்), முல்லைக்காடு, இந்தி எதிர்ப்புப் பாடல்கள், படித்த பெண்கள் (உரை நாடகம்), கடல்மேற்குமிழிகள் (காவியம்), குடும்ப விளக்கு III, திராவிடர் திருப்பாடல், அகத்தியன் விட்ட புதுக்கரடி நூல் வெளியிடல்.

1949 – பாரதிதாசன் கவிதைகள் 2 ஆம் தொகுதி, சேரதாண்டவம், தமிழச்சியின் கத்தி (குறுங்காவியம்), ஏற்றப்பாட்டு வெளியிடல்.

1950 – குடும்ப விளக்கு IV, குடும்ப விளக்கு V வெளியிடல்.

1951 – அமிழ்து எது? – கழைக்கூத்தியின் காதல் வெளியிடல்.

1954 – பொங்கல் வாழ்த்துக் குவியல் வெளிவரல், குளித்தலையில் ஆட்சிமொழிக் குழுவிற்குத் தலைமை ஏற்றல்.

1955 – புதுவைச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றியுற்று அவைத் தலைமை ஏற்றல். பாரதிதாசன் கவிதைகள் – மூன்றாம் தொகுதி வெளியிடல்.

1956 – தேனருவி இசைப்பாடல்கள் வெளியிடல்.

1958 – தாயின் மேல் ஆணை; இளைஞர் இலக்கியம் வெளியிடல், தமிழகப் புலவர் குழுவின் சிறப்புறுப்பினராதல், 'குயில்' கிழமை ஏடாக வெளிவருதல்.

1959 — பாரதிதாசன் நாடகங்கள், குறிஞ்சித் திட்டு வெளியிடல், பிசிராந்தையார் நாடகம் தொடர்தல், 1.11.50 முதல் திருக்குறளுக்கு வள்ளுவர் உள்ளம் என்ற உரை விளக்கம் எழுதுதல்.

1961 — சென்னைக்குக் குடிபெயர்தல், பாண்டியன் பரிசு — திரைப்படம் எடுக்கத் திட்டமிடல். செக் நாட்டு அறிஞர் கமில் சுவலபில் செக் மொழியில் பெயர்த்த பாவேந்தரின் பாடல்களைக் கொண்ட நூலைப் பெறுதல்.

1962 — சென்னையில் மீண்டும் 'குயில்' கிழமை ஏடு (15.4.62). அனைத்துலகக் கவிஞர் மன்றத் தோற்றம். கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா வெளியிடல்.

1962 — மூதறிஞர் இராசாசி, தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் பொன்னாடை அணிவித்துக் கேடயம் வழங்கல்.

1963 — பன்மணித்திரள் நூல் வெளியீடு. 72ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா.

1964 — பொது மருத்துவமனையில் ஏப்பிரல் 21இல் இயற்கை எய்துதல். மறுநாள் புதுவை கடற்கரையில் உடல் அடக்கம். வாழ்ந்த காலம் 72 ஆண்டு, 11 மாதம், 28 நாள்.

1965 — ஏப்பிரல் 21, புதுவை கடற்கரை பாப்பம்மா கோயில் இடுகாட்டில் பாரதிதாசன் நினைவு மண்டபம், புதுவை நகராட்சியினரால் கட்டப்பெற்றது.

1968 — சென்னையில் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது, பாவேந்தரின் திருஉருவச்சிலை, மெரினா கடற்கரையில் திறந்து வைக்கப்பட்டது.

1969 — பிசிராந்தையார் நூல் பரிசுக்குத் தேர்ந்தெடுத்தல்.

1970 — மார்ச்சு, கவிஞரின் 'பிசிராந்தையார்' நாடக நூலுக்கு சாகித்திய அகாதமி ரூ.5000 பரிசு வழங்கியது.

1971 — ஏப்பிரல் 29இல் பாவேந்தரின் பிறந்த நாள் விழா புதுவை அரசு விழாவாகக் கொண்டாடப்பெற்றது. ஆண்டு தோறும் அரசு விழா எடுக்கிறது. பாவேந்தர் வாழ்ந்த பெருமாள் கோயில் தெரு 95–ஆம் எண் இல்லம் அரசுடைமை யாயிற்று. அங்கே புரட்சிக் கவிஞர் நினைவு நூலகம் — நினைவகம் அருங்காட்சியகமாக கவிஞரின் ஆவணக் காப்பகமாகத் திகழ்கிறது.

1972 — ஏப்பிரல் 29, பாவேந்தரின் முழு உருவச்சிலை புதுவை அரசினரால் திறந்து வைக்கப்பெற்றது.

இவர்கள் யார்?

வயவரின் மன்னன்	... பிறைநாட்டின் அரசன்
கன்னல்	... ... அரசி
முல்லை	... ... மகள் இளவரசி
மாழை	... ... படைத் தலைவன்
கண்ணி	... ... அவன் மனைவி
கிள்ளை	... ... அவர்கள் மகள்
வல்லுளி	... ... அமைச்சன்
வேலி	... ... அவன் மனைவி
சாலி	... ... அவர்கள் மகள்
கடம்பன்	... ... பீலி நாட்டரசன்
ஆம்பல்	... ... அரசி
நிலவு	... ... அவர்கள் மகள்

நல்ல தீர்ப்பு

பிறை நாட்டின் தென்புறத்தில் அமைந்த குளிர் மலர்ச் சோலையில், கோடையின் கொடுமை நீங்கி இருக்க, அந்நாட்டரச னாகிய வயவரி மன்னனும், அரசி கன்னலும், இளவரசி முல்லையும் வந்திருந்தனர். பிறை நாட்டின் படைத் தலைவன் மாழையும், மனைவி கண்ணியும், மகள் கிள்ளையும் வந்திருந்தனர். நாட்டின் அமைச்சு வல்லுளியும், மனைவி வேலியும், மகள் சாலியும் வந்திருந் தனர். மற்றும் கல்விச் செல்வரும் பொருட் செல்வரும் உறவோடு வந்திருந்தனர்.

மற்றும் பிறை நாட்டின் மேற்கில் உள்ளதும் பிறை நாட்டின் சிற்றரசாய் அமைந்ததும் ஆகிய பீலி நாட்டின் மன்னன் கடம்பனும், அரசி ஆம்பலும், இளவரசி நிலவும் வந்திருந்தனர். குளிர் மலர்ச் சோலையில், அவர்கள் இனிதாக நாள் கழித்தார்கள், ஒவ்வொரு நாளும் விழா நாள்.

இன்று மகளிர் நாள்.

சிற்றரசன் மகள் நிலவு அரங்கேறுகின்றாள். மற்றப்பெண்டிர்கள் காட்சி காணும் அவாவோடு ஆடலாசிரியன் பாடுகின்றான்.

நிலவு ஆடுகின்றாள்.

களை யெடுத்தார் பல பெண்கள்! – கீழ்க்
கவிந்தனவே அவர் கண்கள்!
வளை குலுங்கும் கைகள்! வளைந்திடும் மெய்கள்
விளைவைக் கொடுக்கும் அல்லி, குவளை, செந்தாமரைக்
களை யெடுத்தார் பல பெண்கள்

மண்டும் களைகள் தமை
நண்டு நிகர் விரல்கள்
கொண்டு களைவதொரு காட்சி!
கெண்டை உலவுகையில்
பெண்டிர் விழிகள் தமைக்
கண்டு நாணும், என்ன வீழ்ச்சி!
தொண்டை இனிய கற்
கண்டோ மலரில் வரும்
வண்டோ? என இசைக்கும்
தண்டமிழ் இசை பாடிக்
களை யெடுத்தார் பல பெண்கள்

கூந்தல் அவிழ்ந்து விடும்
வாய்ந்த அருவிபோல்!
ஏந்தி முடிக்கும் அவர் அங்கை!
சோர்ந்தே விழுந்து விடும்
மேலுடை, நூலிடையில்
தூக்கிச் செருகும் அவர் செங்கை!
ஆர்ந்த மயிலினங்கள்
ஆடுகையில் தாள் பெயர்ந்து!
தீர்ந்த இடத்தை விட்டுத்
தீராத நன்செய் இடைக்

களை யெடுத்தார் பல பெண்கள்!

அரசி கன்னல்: ஆ! நான் எங்கே இருக்கின்றேன்? மகிழ்ச்சியன்றி மற்றொன்றும் இல்லாத இன்ப உலகிலா!

முல்லை: என் நினைவு என்னிடம் இல்லையம்மா! இளவரசி நிலவு ஒருத்தி: அவள் ஆடத் துவக்கியவுடன் அவளிடம் களை எடுக்கும் பெண்கள் பலரைக் கண்டேன் அம்மா!

படைத் தலைவன் மகள் கிள்ளை, தங்கச் சிலை போல் இன்னும் செயலற்றுக் கிடக்கின்றாள். அமைச்சன் மகள் சாலி, நெஞ்சில் இன்பம் தாங்காமல் அழுகின்றாள். அவள் கண்கள் மகிழ்ச்சியை நீராக்கி வடிக்கின்றன.

பேரரசி கன்னல் அரங்கின் மேல் ஏறுகிறாள். நிலவின் கலைத் திறம் பற்றிப் பாராட்டிப் பேசலுற்றாள்.

நிலவே, உன் கலைவாழ்வு பல்லாண்டு நிலவுக!

நிலவே, உன் வாழ்நாள் காவிரிபோல் பெருகுக!

துன்ப உலகினின்றும் இன்ப உலகிற்கு எமை அழைத்துச் சென்றாய். தாழ்ந்த செயல்களை, தாழ்ந்த நினைவுகளை இமைப்போதும் நீங்காத எம்மை அமைதியில் குளிக்க வைத்தது உன் ஆடல்!

நிலவே! இத்தனை பெரிது; இத்தனை சிறந்தது; இத்தனை இன்பம் பயப்பது; ஆட்டக்கலை என்பதை இன்று அறிந்தோம்.

ஆடல், பாடல், அழகு எனும் மூன்றின் ஒன்றும் குறையாத முழுநிலவே, நான் இன்று உனக்குத் தரும் பரிசு ஒன்று.

உன் தந்தை எம் அரசர்க்கு நடக்கவும் தெரியாத இள யானைக் கன்று ஒன்றைத் தந்தார். அந்த ஆண் யானைக் கன்றானது எம்மிடம் முப்பது ஆண்டுகள் வாழ்ந்து பின், இறந்தது. அதன் தந்தமானது

முத்துப்போல் ஒளியுள்ளதாகவும், வயிரம் போல உறுதியுள்ளதாகவும் இருந்ததால் அதைப் பொற் கொல்லரிடம் தந்தோம். அவன் அந்தத் தந்தத்தில், அறுத்து, வயிரம் பதித்துத் தந்தது இந்தப் பதக்கம். அதை உனக்குத் தந்தேன்.

[பேரரசி, நிலவுக்குப் பதக்கமார்பணி சூட்டுகிறாள். அனைவரும் கை தட்டுகிறார்கள்]

நிலவு கூறுகிறாள்:

பேரரசியாருக்கு நான் நன்றி செலுத்துகிறேன். "நான் பிறந்த அன்று, அந்த யானைக் கன்று பிறந்தது. ஆறு தினங்கள் சென்றபின் என் தந்தை அதைப் பேரரசர்க்கு அளித்தார்" என்று என் தாயார் சொன்னார்கள். அதன் தந்தத்தால் எனக்கு இந்த வயிரப் பதக்கத்தைத் தந்ததால் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும் கருதுங்கள்!

[அனைவருக்கும் வியப்பு]

படைத்தலைவன் மகள் கிள்ளை கேட்டாள்:

அப்படியானால், அம்மையாரே தங்கள் வயது என்ன?

உடனே அமைச்சன் மகள் சாலி கேட்டாள்:

யானைக் கன்று வளர்ந்து, இறந்து, பல்லாண்டுகள் போயின. தந்தத்தால் அணிசெய்து பல்லாண்டுகள் கழிந்தன!

கூடவே பேரரசியார் கூறினாள்:

ஏறக்குறைய உனக்கு ஐம்பது ஆண்டுகள் ஆயினவா? என்ன புதுமை?

நிலவு கூறினாள்:

எனக்கு ஐம்பது ஆண்டுகள் ஆயின. என் தந்தை எழுபது வயதுடையவர். அன்னைக்கு அறுபத்தெட்டு.

பேரரசி: உலகைத் தன் வலிய கையோடு கொண்டு போகும் ஆயுள் நாள், நிலவே உன்னை மறந்து, விட்டுப் போனதா? கரையற்ற கால வெள்ளத்துக்குத் தப்பி நிலவே நீ எந்தக் கரையில் நின்றிருந்தாய்? உதிர்கின்ற நாளின் சருகு போன்ற இளமை, உனக்கு மட்டும் ஆலின் விழுது போல் ஊன்றி நின்றதென்ன? உடல் நூல் வல்ல மருத்துவனும், உயிர்ப்பினைக் கட்டுப் படுத்தும் அறி ஞனும் நாளோடு தவறாது காணும் முதுமையை நீ சந்தித்ததில்லை எனில் புதுமை அன்றோ!

நிலவு கூறினாள்:

ஆடல் பயில்வாரின் உடல் வாடல் இல்லை. புதுமை மாறாத ஆடற்கலைஞருக்கு முதுமை நேருமோ பேரரசியாரே?

[அனைவர் கண்ணிலும் வியப்பு]

பேரரசியார் பேசுகின்றார்:

நிலவே! நீடுவாழ்க. புதியதோர் எண்ணம்! நினைக்கும் தோறும் வியப்பைச் செய்யும் ஓர் ஒப்பற்ற நிலை நீ தந்தாய் நீ வாழ்க!

ஆடல் அரங்கு முடிவு பெற்றது. அனைவரும் உணவு கொள்ளச் செல்வோமாக.

[அனைவரும் செல்கிறார்கள். படைத் தலைவன் மகளாகிய கிள்ளை மட்டும் பறக்கவில்லை]

காட்சி 2

[அரங்கில் ஒரு புறம். நிலவு காற்சதங்கையை அவிழ்க்கக் குனிகிறாள். அதற்குள் வேறோர் மலர் போன்ற கை சதங்கையை அவிழ்த்து உதவி செய்கிறது.]

நிலவு: என் செல்வமே! நீ யார்?

கிள்ளை: அன்னையே! படைத்தலைவர் மகள்; கிள்ளை

நிலவு: உன் பிரிவு உன் அன்னை தந்தையர்க்குத் துன்பத்தைச் செய்யுமே!

கிள்ளை: ஆடல் பயிலவிரும்புகிறேன். அந்த விருப்பம் என் உடலின் ஒவ்வோர் அணுவிலும் கிளர்ச்சி செய்கிறது. என் அவா பருவக்காற்றுப் போல் எழுந்து பின் மாறுவ தன்று; யானை கட்ட ஒன்றிய தறிபோல் உறுதி கொண் டது. பசி கொண்டு கேட்பவனுக்கு ஓர் அகப்பைக் கஞ்சி மறுப்பாரோ, என் வேண்டுகோளைத் தாங்கள் மறுப்பீரோ! ஆடல்; தங்களிடம் உள்ள கடல் போன்ற ஆடற்கலை. கொஞ்சம் இறங்குவீர்களா?

நிலவு: தசை சரியாத கொடி போன்ற மேனி, உடுக்கை போன்ற இடை, காதளவு நீண்ட கண்ணில் உயிர்! இதழின் கடையில் இயற்கையில் சிந்தும் சிறு நகை. அத்தனையும் உனக்கு அமைப்படி கிள்ளையே! ஆடல் உனக்கு வரும். ஆடலுக்கு நீ வந்தவள். பீலி நாட்டில் தடாரி வட்டம்

என்னும் வட்டத்தில் நான் வாழ்கின்றேன். அங்கு நீ வரு வருதல் வேண்டும். ஏற்பாடு செய். நான் செல்லுமுன் கூறு.

கிள்ளை: என்னை தந்தையரிடம், கெஞ்சி, அவர்கள் தரும் விடையை அறிவிக்கின்றேன் அம்மணி

நிலவு: போய் வா

[கிள்ளை பணிந்து, பறந்தாள்]

நிலவு குளிர் மலர்ச் சோலையில் தனக்காக அமைந்த விடுதி நோக்கிப் போகிறாள். சாலி என்னும் அமைச்சன் மகள் எதிர் நோக்கி வந்து பணிகிறாள்.

நிலவு: நீ யார்?

சாலி: நான் சாலி,

நிலவு: தந்தை?

சாலி: இந்நாட்டின் அமைச்சர் வல்லுளியார்

நிலவு: என்ன செய்தி?

சாலி: எனக்கு நீங்கள் ஆடல் பயிற்சி அளிக்க வேண்டும்.

நிலவு: நான் பீலி நாட்டில் தடாரி வட்டம் என்னும் இடத்தில் வாழ்கின்றேன். அங்கு நீ வர ஏற்பாடு செய்து கொள்.

சாலி: நன்று! போய் வருகின்றேன்.

காட்சி 3

[பெருமன்னன் மகள் முல்லையும், சாலியும், கிள்ளையும் குவளைப் பூக் குலுங்கும் நிழலில் அமைந்த திண்ணையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.]

கிள்ளை: ஆற்றூர் காரி மன்னனுக்கும், நம் நாட்டுப் பேரரசர்க்கும் மனத்தாங்கல் இருந்தால், பீலி நாட்டில் நான் ஏன் ஆடல் கற்றுக் கொள்ளக் கூடாது?

சாலி: நீ அதை அவர்களையே கேட்பது தானே.

கிள்ளை: கேட்டேனே சாலி.

சாலி: என்ன சொன்னார்கள்?

கிள்ளை: அவர்களா? நீளமாகச் சொன்னார்கள், என்ன சொன்னார்கள் தெரியுமா? "அதற்கு மேல் கேட்காதே — அரசியல் செய்தி"

முல்லை: கிள்ளை! அதோடு நிறுத்திவிடு இவ்வளவு கூட நீ வெளிப்படையாய்ப் பேசியிருக்கக் கூடாது.

கிள்ளை: ஏன் சாலி நீ கேட்டாயா உன் பெற்றோரை?
சாலி: கேட்டேன்.
கிள்ளை: கேட்டாயா? என்ன சொன்னார்கள்?
சாலி: உனக்கு சொல்லியது போலில்லை.
கிள்ளை: அப்படியா. என்ன?
சாலி: "போகக்கூடாது"
கிள்ளை: ஏன் என்று கேட்டாயா?
சாலி: விட்டுவிடுவேனா?
கிள்ளை: உம்
சாலி: ஏன் என்றேன். அதற்கு அவர், ... கேட்காதே!

[அனைவரும் சிரிப்பு]

முல்லை: உங்கள் ஆவல் நிறைவேறாததற்கு நான் வருந்துகிறேன்.
கிள்ளை: இளவரசியே, என்கண்ணே, என்னை என் பெற்றோர் "போ" என்று சொன்னாலும் நான் உடனே போயிருக்க மாட்டேன். ஏன் தெரியுமா?
முல்லை: இதென்ன புதுமை?
சாலி: ஏன்?
கிள்ளை: கொஞ்ச நாளைக்கு மிக்க வேலையிருக்கிறது.
முல்லை: உனக்கா?
சாலி: என்ன கூடை முறம் கட்ட வேண்டுமா?
கிள்ளை: நன்றாகக் கேட்டாய். நீ சொன்னது பாதி சரி
முல்லை: கூடை முறம் ஒரு பாதி கட்ட வேண்டும்; மறுபாதி? இவைகளில் எது சரி?
கிள்ளை: "கட்ட வேண்டும்"
சாலி: என்ன கட்ட வேண்டும்?
முல்லை: விரைவில் சொல்லிவிடு?
கிள்ளை: மாலை கட்டவேண்டும். இளவரசிக்கு.
முல்லை: விளங்கவில்லை.
சாலி: இளவரசிக்குத் திருமணமா?
கிள்ளை: உனக்கும் நினைவு இல்லை. முல்லை பிறந்த நாள் அடுத்த வெள்ளிக்கு.
முல்லை: ஆ!
சாலி: உனக்கு மட்டும் எப்படி நினைவு வந்தது?
கிள்ளை: முல்லை எப்போதும் என் நினைவில் நிலையாக இருக்கிறாள்.
முல்லை: கிள்ளை நீ என் மீது வைத்துள்ள அன்பு பயனற்றது.

கிள்ளை: அது உனக்குத் தெரியாதோ, அன்பு பயனை எதிர் பார்த்ததில்ல. பயனை எதிர் பார்த்தது எது தெரியுமா? வாணிகம்.

முல்லை: வாயாடி! போவோம்.

சாலி: கிள்ளையோடு பேசுவதில் தெவிட்டு ஏற்படுவதில்லை.

[அனைவரும் எழுந்திருக்கிறார்கள்]

அங்கம் 2

காட்சி 1

[பிறை நாட்டின் அரண்மனையில் ஒரு பகுதி இளவரசி முல்லை மணித் தவிசில் வீற்றிருக்கிறாள். தோழிமார் பலர் புடை சூழ்ந்திருக்கிறார்கள். முல்லையின் தந்தையும், பேரரசனுமாகிய வயவரி மன்னனும் பேரரசி கன்னலும் வருகிறார்கள். மங்கல முரசு அதிர்கின்றது]

பேரரசர்: வாழிய குழந்தாய். தமிழ் நன்று. அது தமிழர்க்கு உறுதி பயப்பது. அதை இன்னும் நீ பயில்க! தமிழறிவு பெறுக. பிறைநாட்டின் எதிர்கால அரசி நீ. அறம் இது, மறம் இது என்று ஆய்ந்துணர்க. வாழிய நீடு வாழிய!

பேரரசி: அன்புக்கொரு மகளே, முல்லையே மணம் எய்துக உனது பதின்மூன்றாம் ஆண்டு தொடங்கிற்று. நீ வாழிய!

முல்லை: உங்கள் வாழ்த்து நன்று. என்பால் தங்கட்குள்ள அன்புக்கு நன்றி! தந்தையார் வாழ்க, அன்னையார் வாழ்க. தமிழ் வாழ்க.

[முல்லை பணிகின்றாள்]

[பேரரசும் பேரரசியாரும் போகின்றார்கள்]

நிலவு, சாலி, தாழை, பொன்னி, தோரை முதலிய பெண்கள், தத்தம் இயல்புக்கேற்ற கையுறையுடன் வருகிறார்கள்.

தோரை — தான் கொணர்ந்த தங்கப்பானை யடுக்கிய வெள்ளியுறியை முல்லைக்குத் தந்து — வாழிய இளவரசியே என்று வாழ்த்துகிறாள்.

பொன்னி — தான் கொணர்ந்த, ஒன்பது வகை மணிகள் அழுத்திய தலையணியாகிய சுட்டியை முல்லைக்குத் தந்து — வாழிய இளவரசியே! என்று வாழ்த்தி ஒருபுறம் அமைகிறாள்.

தாழை — தான் கொணர்ந்த முத்துப் பரல் இட்ட காற்சிலம்பை முல்லைக்குத் தந்து, வாழிய இளவரசியே என்று வாழ்த்தி மற்றொரு புறம் அமைகிறாள்.

சாலி — தான் கொணர்ந்த எண் கோவையுள்ள இடையணியாகிய காஞ்சியை முல்லைக்குத் தந்து வாழிய இளவரசியே என்று வாழ்த்தி ஒருபுறம் அமைகிறாள்.

கிள்ளை — தான் கொணர்ந்த, முல்லையில் தொடுத்த தான முல்லைத் தொடயலை முல்லைக்குச் சூடி, வாழிய இளவரசியே என்று வாழ்த்த, இளவரசியாகிய முல்லை, அவளைக் கட்டித்தழுவித் தன் அண்டையில் நிறுத்தித் தானும் எழுந்து நின்று கூறுகிறாள்.

அன்புள்ள தோழியர்களே,

என் பிறந்தநாட் சிறப்பை சிறக்க வைத்தீர்கள். உங்கள் வாழ்த்து என்னைப் பெருவாழ்வில் சேர்க்கத்தக்கது. நன்றி கூறுகிறேன்.

[மீண்டும் மங்கல முரசு முழங்குகிறது. நிலவு வருமுன் மற்றவர்கள் போய் விடுகிறார்கள்]

காட்சி 2

சாலி, தாழை, பொன்னி, தோரை நால்வரும் முல்லைக்கு வாழ்த்துக்கூறி வருகையில் தமக்குள் பேசிக் கொள்ளுகின்றார்கள்.

தோரை: பேரரசு, பேரரசி இருவருக்கும் அன்புக்கு ஒருத்தி முல்லை இளவரசி; நாளைய பட்டத்தரசி அவள் இனிது வாழ்க!

பொன்னி: பிறை நாட்டின் தனியரசி முல்லை. அவளின் அடக்கம் அன்பு நன்றியறிதல் ஆகிய நற் பண்புகள் அவளுக்குள்ள மேன்மையை ஆயிரம் பங்கு அதிகப்படுத்துகின்றன.

சாலி: ஏன் தாழை நீ என்ன சொல்லுகின்றாய்?

தாழை நம்மிடத்தில் அவள் அன்புடையவள். அவள் ஆட்சிக் காலத்தில் நாட்டு மக்கள் மேல் அவள் அன்புடையவளாயிருத்தல் வேண்டும். இருப்பாள். நல்லவள்.

சாலி: கிள்ளை நம்முடன் வரவில்லை. முல்லைக்குக் கிள்ளை மேல் மிக்க அன்பு. உயர்ந்த அணிகள், பொருள்கள் நாம் தந்தோம். கிள்ளை காசு பெறாத அலங்கல் கழுத்தில் இட்டாள் அதற்காக முல்லை இளவரசி கிள்ளையைத் தழுவிக் கொண்டாள். கண்டீர்களா! கிள்ளை எப்படி எவரிடம் வளைந்து கொடுக்க வேண்டும் என்பதை நன்றாய் அறிந்தவள். முல்லையும் பசப்புக்கு மகிழ்பவள் கிள்ளை

யின் வஞ்சகம் முல்லைக்குத் தெரியாது. தெரிந்து கொள் வாள்.

தோரை: மெய்தான்! நம்மிடம் ஒருமாதிரி; அவளிடம் வேறு மாதிரிதான் நடந்து கொண்டாள் முல்லை!

பொன்னி: கிள்ளை கொண்டுவந்தது எளியபொருள். அதற்காக முல்லை வருந்தவில்லை என்பதைக் காட்ட அவளிடம் கொஞ்சம் அதிக அன்பைக் காட்டினாள் வெளிக்கு. அது தவிர முல்லைக்கு நம்மேல் உள்ள அன்பு குறைவு என்று நாம் எண்ணலாமா?

கிள்ளை: சரி உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். போகலாம் விரைவாய்!

[மறைதல்]

அங்கம் 3

காட்சி 1

அரண்மனையின் ஒரு புறத்தில், முல்லை, கிள்ளை, சாலி மூவரும் பேசியிருக்கிறார்கள்.

கிள்ளை: இளவரசி! ஏதாவது படிக்கலாமே.

சாலி: வேண்டாம் ஏதாவது விளையாடினால் நன்றாய் இருக்கும்.

முல்லை: படிக்கலாம் கிள்ளை! நீ போய், அம்மா நீராடும் அறைக்கு இந்தப் புறத்தில் ஊஞ்சலின் மேல் கவிதை நூல் இருக் கிறது. எடுத்து வா.

[அவள் சென்று எடுத்துவந்து, தானே அதைத் திறந்து பார்க்கிறாள்.]

கிள்ளை: இதைக்கேள்! சாலி, கவனமாய்க் கேள் நீயும்.

பச்சை பசுந்தழைக் காட்டினிலே ஒரு
பக்கத்தில் பூத்திட்ட முல்லையைப் பார்
அச்சடையாளம் நல் வான்குளத்தில் மின்னும்
ஆயிரம் மீனெனத் தோன்றுமடி!
அச்சில் அடித்திட்ட வெள்ளிப் பணம் கையில்
அள்ளி இறைத்தது போல் இருக்கும்!
இச்சை நறுமணத் தால்அழைக்கும் — முல்லை
ஏன் என்று பார்க்கையிலே சிரிக்கும்!

[முல்லை சிரித்தாள்]

கிள்ளை: முல்லை, ஏன் என்று பார்க்கையிலே சிரிக்கும்!

சாலி: முல்லைக்கு முல்லைப் பொட்டு!

[கிளியின் கூச்சல் கேட்கிறது]

முல்லை: சாலி ஓடு கிளி கத்துகிறது!

[அவள் ஓடிக் கூட்டொடு தூக்கி வருகிறாள். முல்லை அதைக் கையில் ஏந்திக்கொள்கிறாள் கூட்டினின்று எடுத்து]

முல்லை: பத்துப் பணத்திற்கு வாங்கினேன். அப்போது இத்தனை அளவு சிறிது குழந்தை. இப்போது கத்தும் குரலுக்கு வையமும் போதாது. கையிலே வைத்திருந்தால் தான் சாது!

[தோழி வள்ளி வருகிறாள்]

வள்ளி: அன்னையார் அழைத்தார்கள்.

முல்லை: எனக்கு விடை கொடுங்கள்.

கிள்ளை: சரி.

[கிள்ளையும் சாலியும் வீடு செல்கிறார்கள்]

காட்சி 2

[பேரரசி கன்னல் தன் படுக்கையறைப் பக்கம் உலவுகின்றாள், அவள் விழிகள், அங்கு பல பக்கங்களையும் கூர்ந்து பார்க்கின்றன. அவள் எதையோ தேடுகிறாள்]

[முல்லை வருகிறாள்]

முல்லை: ஏன் அம்மா அழைத்தீர்கள்?

கன்னல்: நீ உணவு உண்ணாமல் இருப்பது உனக்கே தெரியவில்லையா! நேரம் ஆகிறது.

முல்லை: நீங்கள் என்ன தேடுகிறீர்கள். கவிதைச் சுவடியா?

கன்னல்: இல்லை.

முல்லை: பின்னென்னம்மா.

கன்னல்: அந்தக் கணையாழி?

முல்லை: எந்தக் கணையாழி?

கன்னல்: மாணிக்கக் கணையாழி?

முல்லை: திடுக்கிடும் சேதி, உங்கள் உயிர் ஆயிற்றே? எங்கு விழுந்திருக்கும்!

கன்னல்: கூச்சலிடாதே, அது தவறியது உன் தந்தையார் அறிந்தால் வருந்துவார். அது மணநாளில் என் விரலில் அவர் இட்டது. இங்குதான் இருக்கும். நீ செல் உணவுண்ண!

முல்லை: நானும் தேடுகிறேன் அம்மா!

கன்னல்: உணவருந்திய பின் தேடு.

முல்லை: இதோ வந்துவிட்டேன்.

[போகிறாள்]

கன்னல்: அதற்காக நீ செவ்வையாக உணவுண்ணாமல் ஓடிவந்து விடாதே.

அங்கம் 4

காட்சி 1

ஓய்வுகொள்ளும் அழகிய தனி அறையில் மணித்தவிசில் அரசர் வீற்றிருக்கிறார் உணவுண்ட பின். இருதோழியர் மயில் விசிறி கொண்டு விசிறுகிறார்கள். அவர் யாரையோ எதிர்பார்க்கிறார் வழக்கப்படி. வள்ளி வெற்றிலைச் சுருள் தட்டேந்தி அங்கு வருகிறாள். அரசர் கண்ணில் வியப்பு.

அரசர்: அரசியார் எங்கே வள்ளி? உடல் நலம் குறைவா?

வள்ளி: கணையாழி காணவில்லை. பணிப் பெண்கள் தேடுகிறார் கள் அரசியார் தேடுகிறார் தங்களிடம் மன்னிப்பு வேண்டி னார்கள்.

அரசர்: எந்தக் கணையாழி?

வள்ளி: மாணிக்கக் கணையாழி.

அரசர்: எனவே அரசியார் துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். திரு மணத்தில் நான் இட்ட கணையாழி! அரசியாரை மெது வாக என்னிடம் அழைத்து வந்துவிடு. நான் தேறுதல் கூறுகிறேன். பணிப்பெண்கள் தேடட்டும் போ.

[அவள் போகிறாள்]

[அரசி வருகிறாள். வள்ளியும் வருகிறாள்]

அரசி: உங்களிடம் வைத்த அன்பு குறைந்து விட வில்லை. என் விழியை, என் நினைவை, தங்கள் கணையாழி ஏமாற்றிவிட்டது.

அரசர்: கன்னல்! அதைப்பற்றி நீ வருந்தாதிருந்தால் போதும். முப்பது ஆண்டுகள் இன்பத்தை நல்கிக் கழிந்தன. வாழ்நாட்களில், ஐம்பது ஆண்டுகள் கழிந்தபின் திருமண

கணையாழி காணாமற் போனால், அதனால் குற்ற மில்லை. நீ மறந்திரு. இம்மியளவு துன்பத்தையும் உன் நெஞ்சு தாங்காது.

அரசி: யார் எடுத்திருப்பார்? குற்றவாளியை விட்டு வைத்தால் இன்னும் இதுபோல நடக்குமே!

அரசர்: அரண்மனை ஆட்களையும், பணிப் பெண்களையும், காவலர்களையும், உடற்காப்பாளர்களையும், மற்றும் இங்கு வருவோர் போவோரையும் கேட்டு ஆராய்வோம்.

அரசி: கோள்நிலை வல்லவர் கூறமாட்டாரா?

அரசர்: கோள்நிலை வல்லவர் கூறுவதைக் கொண்டு குற்றத்தை உறுதி செய்வதை முட்டாள் தனமென்று அறநூல் கூறுகிறது. உணர்வும் ஒத்துக்கொள்ளாது.

[முல்லை வருகிறாள்]

முல்லை: அப்பா!

அரசர்: ஓடிவா குழந்தாய்.

[அருகில் வருகிறாள்]

முல்லை: அகப்பட்டதா அம்மா?

அரசி: இல்லை முல்லை!

அரசர்: உன்னிடம் வந்து பேசிப் போகும் பெண்களில் யார்மேலாவது ஐயப்பட இடமுண்டா குழந்தாய்!

முல்லை: இல்லை அப்பா கிள்ளை, சாலி, தாழை, பொன்னி, தோரை, உண்மையில் அடையாளங்கள், இனி இங்கு வரவேண்டாம் என்று அவர்களைச் சொல்ல நினைக் கிறீர்களா அப்பா.

அரசர்: வாழி வாழி நான் அப்படிச் சொல்லவே மாட்டேன்.

[சாலி வருகின்றாள்]

சாலி: இளவரசியார் இருக்கிறாரா?

முல்லை: அப்பா சாலி இங்கு வரலாமா?

அரசர்: ஓ, நன்றாக!

முல்லை: சாலி உள்ளே வா!

[வருகிறாள், முல்லை கை காட்டுகிறாள். சாலி உட்கார்ந்தாள் பக்கத்தில்]

சாலி: பேரரசர், பேரரசியார் ஏதோ தனியாகப் பேசுகையில் நான் வந்தது இடையூறோ என்னவோ, மன்னிக்க வேண்டு கிறேன்.

அரசி: அப்படி ஒன்றுமில்லை என் மாணிக்கக் கணையாழி மறைந்து விட்டது அது பற்றிய ஆராய்ச்சி. அரண்மனை ஆட்கள் எடுத்திருப்பார்கள். அல்லது பணிப்பெண்கள். இல்லை என்றால் அகப்பட்டு விடவும் கூடும்.

சாலி: இல்லையம்மா, கிள்ளை எடுத்தாள்!

முல்லை: கிள்ளையா?

கன்னல்: அப்படியா!

அரசர்: நீ எப்போது பார்த்தாய்?

முல்லை: நீ கண்ணால் பார்த்தாயா?

சாலி: இளவரசியே! நானும் கிள்ளையும் உன்னை விட்டுப் பிரிந்து போகையில், கிள்ளையின் இடையினின்று சிறு பொருள் ஒன்று விழுந்தது. கிள்ளை நானறியாதபடி அதை எடுத்தாள். குவிந்த விரல்களின் புறத்தில், சிவந்த ஒளி அடித்தது. என்ன என்றேன்; ஒன்றுமில்லை என்று கூறி சாப்பிட்டபின் அரண்மனைக்குப் போகலாமா என்று, வேறு பேச்சைத் துவக்கினாள். அதை அவள் இடையில் செருகினாள். அது, துணியில் முடிந்த தங்கக் காசு அளவு காட்சி அளித்தது.

அரசர்: குழந்தாய்! நீ வருந்தலாகாது. நான் கிள்ளையை அற மன்றுக்கு அழைக்க வேண்டும். அவள் என் படைத் தலைவர் மகள், உனது அன்புள்ள தோழி ஆயினும் அறத்தின் முன் அனைவரும் நிகர்.

முல்லை: அவள் நல்லவள் அப்பா.

அரசர்: அறமன்றம் அவளை நல்லவள் என்று உறுதி செய்யட்டுமே!

சாலி: அரசே, அவள் தீயவள்.

அரசி: அவள் தீயவளானால், அறமன்றம் தீர்ப்புக் கூறட்டும்.

அரசர்: மன்றம் நோக்கிச் செல்லுவேன். இதில், சேர்க்கையுடையவர் அனைவரையும் மன்று நோக்கி வரும்படி அழைப்பு அனுப்புகிறேன்.

சாலி: வணக்கம்.

[போகிறாள்]

கன்னல்: கிள்ளை நல்லவள் நான் எண்ணினேன்.

முல்லை: இப்போதும் அவள் நல்லவள் தான் அம்மா.

[அரசர் போகிறார். முல்லை தலைகுனிந்தபடி வருத்தத்தோடு தன் அறை நோக்கிச் செல்லுகிறாள்]

அங்கம் 5

காட்சி 1

[வீட்டில் படைத்தலைவன் மாழையும், கண்ணி என்னும் அவன் மனைவியும் தாங்கொணாத் துன்பத்தோடு தலை சாய்த்து நாற்காலியில் துவள்கின்றார்கள். எதிரில் கண்ணீர் ததும்பக் கிள்ளை நிற்கிறாள்]

மாழை: நீ எடுக்கவில்லையானால், சாலி ஏன் அப்படிச் சொல்லு கிறாள்?

கிள்ளை: என்னை ஏன் அவள் இத்தனை பெரிய குற்றத்திற்கு உட்படுத்துகிறாள் என்பது எனக்கே விளங்க வில்லை. அவள் முழுதும் பொய் சொல்லுகிறாள். அன்னை தந்தைக்கும் தெரிவிக்காமல் அந்த மாணிக்கக் கணை யாழியை நான் எப்படி அணிந்து கொள்ள முடியும்? அப்பா, இத்தனை பெரிய குற்றம் நான் இழைப்பவளா? இல்லை. இல்லவேயில்லை அன்னையே!

கண்ணி: நாழிகையாகிறது மன்றுநோக்கி கூட்டிச் செல்லுங்கள்.

மாழை: நான் போகமாட்டேன். மானக்கேடு தலை தூக்க முடிய வில்லை. மகளே, நீ போ, அங்கேயாவது உண்மை கூறு!

[ஓவென்று அலறிக்கொண்டு கிள்ளை ஓடுகிறாள்]

காட்சி 2

அறமன்றம்:

பிறைநாட்டரசர் வயவரி மன்னர் பெருந் தவிசில் வீற்றிருந்தார் இடப்புறமாக, வழக்கெடுத்துரைப்போன் வளன் அமர்ந்திருந்தான் வலப்புறமாகக் குறிப்பெடுக்கும் கொன்றை அமைந்திருந்தான். எதிரில் முன் வரிசையில், இளவரசி முல்லையும், அமைச்சன் மகள் சாலியும் இருந்தனர். பின்வரிசையில், அமைச்சு வல்லுளி உட்கார்ந் திருந்தான். தாழை தோரை ஒரு புறம் காணுமாறு வந்திருந்தனர் கிள்ளை குற்றவாளியாக அரசர்க்கு முன் நின்றிருந்தாள் காவலர் பணியாளர் பலர் பல பக்கங்களிலும் நின்றிருந்தனர். பெருமக்கள் பலர் காணுமாறு போந்திருந்தனர்.

பேரரசு எழுந்து

அறமன்றத்தைத் துவக்கம் செய்தேன். நடுநிலை கோணாது தீர்ப்பளிப்பதாய் உறுதி கூறுகிறேன்.

வழக்கெடுத்துரைக்கும் வளன் கூறினான்:

பிறைநாட்டின் பேரரசியார் கன்னல் அம்மையாரின் மாணிக்கக் கணையாழி காணாமற் போயிற்று. அதைக் கிள்ளை என்னும் இவள் – படைத்தலைவர் மாழையின் மகள் களவு செய்ததாகப் பேரரசியர் நினைக்கிறார்கள். இவ்வழக்கின் சான்றினராக இளவரசியார் முல்லையும், அமைச்சர் மகள் சாலியும் அழைக்கப்பெற்றுள்ளார்கள். மன்றில் கூடியுள்ளவர்கள் இவ்வழக்கில் உதவி செய்யும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அரசு: கிள்ளையே, அறமன்றத்தின் முன் மெய் கூறுவதாக நீ உறுதி கூறு.

கிள்ளை: நான் இந்த அறமன்றத்தின் முன் பொய் கூறுவேனாயின், மக்களில் தன்னை உயர்ந்தவன் என்று கூறுகின்ற கொடியோன் செய்யும் கொடுமை செய்தவள் ஆவேன்.
நான் இந்த அறமன்றத்தின் முன் பொய் கூறுவேனாயின். உழுதவனைக் கூலிக்காரன் என்று கூறி உழுதவனைத் தான் பறிக்கும் முதலாளி செய்யும் தீமையைச் செய்தவள் ஆவேன்.

நான் இந்த அறமன்றத்தின் முன் பொய் கூறுவேனாயின், தமிழ் நாட்டில் வாழ்ந்து தமிழால் ஊழியம் பெற்றுத் தமிழை யன்றி அயல் மொழியை ஆதரிக்கும் சழக்கன் செய்யும் சழக்குச் சூழ்ந்தவள் ஆவேன். நான் இந்த அறமன்றத்தின் முன் மெய்யே கூறுவதாக உறுதி கூறுகிறேன்.

அரசர்: கிள்ளாய் நீ அந்த மாணிக்கக் கணையாழியை எடுத்த துண்டா?

கிள்ளை: நான் எடுத்ததில்லை பேரரசே!

அரசர்: அக்கணையாழி இப்போது உன்னிடமோ, உன்னால் பிறரிடமோ இல்லையா?

கிள்ளை: என்னிடம் இல்லை. நான் அதைப் பிறரிடம் கொடுத்து வைத்ததும் இல்லை பேரரசே!

அரசர்: சாலி இது பற்றி உனக்கென்ன தெரியும்?

சாலி: கிள்ளை வைத்திருக்கக் கண்டேன்.

அரசர்: என்றைக்கு?

சாலி: நேற்று

அரசர்: நேற்று அரண்மனைக்குப் போனதுண்டா?

சாலி: நானும் கிள்ளையும் போனதுண்டு.

அரசர்: என்ன வேலை?

சாலி: இளவரசி முல்லைக்கு நாங்கள் தோழிகள்.

அரசர்: இவை மெய்தானா கிள்ளாய்?

கிள்ளை: அவை அனைத்தும் மெய்

அரசர்: முல்லையே இவை மெய்யா?

முல்லை: ஆம் மெய்.

அரசர்: நீ என்ன கூறுவாய் கிள்ளையே!

கிள்ளை: என்னிடம் எப்போது பார்த்தாள் சாலி?

சாலி: நேற்றுக் கையில் வைத்திருந்த போது தான் சாலி பார்த்தாள்.

கிள்ளை: எந்த இடத்தில்

சாலி: இளவரசியை விட்டு வெளிவருகையில்

கிள்ளை: எப்படி வைத்திருந்தேன்?

சாலி: கையில்

கிள்ளை: எந்த கையில்?

சாலி: உம் — வலக்கையில்!

கிள்ளை: என் வலக்கையில் அச் சிறிய பொருளை வைத்திருந்தால் அது எப்படித் தெரிந்தது சாலிக்கு?

சாலி: நான் தான் என்ன அது என்று கேட்டேன் கிள்ளைதான் இது மாணிக்கக் கணையாழி என்று கூறினாள்.

கிள்ளை: அது பற்றிச் சாலி கிள்ளையை ஒன்றும் கேட்கவில்லையா?

சாலி: இல்லை

முல்லை: பேரரசே நான் ஒன்று கூற முன்வருகிறேன். சாலி முதலில் என்னிடமும் தங்களிடமும், கூறியது வேறு அவள் கூறினாள்: கிள்ளையிடமிருந்து ஏதோ ஒன்று கீழ் விழுந் தது. அது சிவப்பொளியுடையதாய் இருந்தது. அதை அவள் இடையில் செருகினாள், அது தங்கக் காசைத் துணியில் அழுத்திய அளவில் தோன்றிற்று என்றாள். இப்பொழுது சொல்வன அனைத்தும் வேறு! கிள்ளை நல்லவள் இப்படிப்பட்ட குற்றம் செய்பவள் அல்ல. சாலி

கிள்ளையைக் குற்றத்தில் உட்படுத்த எண்ணி இவ்வாறு வேண்டுமென்றே கூறுகிறாள் என்று எனக்குத் தோன்று கிறது.

அரசர்: மன்றிலுள்ளவர்களே! அரண்மனைப் பொருள் களவு போனால், அதுபற்றி யார் மேல் சிறிது ஐயம் ஏற்பட்டாலும் அவர்களை அயல் நாடு கடத்தி வைக்கும்படி அற நூல் கட்டளையிடுகிறது.

நான் அதன்படி, கிள்ளை பீலி நாட்டில் நாலாண்டு வாழ்ந்திருக்கத் தீர்ப்பு கூறினேன் இதன்படி கிள்ளை இன்றே பீலி நாட்டுக்குப் புறப்பட்டுவிட வேண்டும்.

[அனைவரும் கண்கலங்குகிறார்கள்]

கிள்ளை: பீலி நாட்டிற்கா? நம் சிற்றரசிருக்கும் இந்தப் பீலி நாட்டுக்குத் தானே பேரரசே?

அரசர்: ஆம் இன்றே பயணத்தைத் தொடங்கு!

[கிள்ளை சிரிப்பில் குதித்தாள். அவள் முல்லையிடம் ஓடிவந்து உரத்த குரலில்,]

இளவரசியே, என் பொருட்டு நீ வருந்துகின்றாயா? நீ மகிழ்ச்சியடை! சாலியின் சூழ்ச்சி; என்னைப் பீலியில் சேர்த்தது அவள் என்மேல் இல்லாததைச் சொல்லி என்னை அந்த நிலாவிடம் சேர்த்தாள். நாலாண்டில், எனக்கு, ஆடல் பாடல் நன்றாய் வந்து விடுமே.

முல்லை: உனக்கு நல்லதாயிற்று! வாழி வாழி, உனக்கு ஏற்பட்ட தண்டனை உன்னை இனிக்க வைத்து விட்டதே ஆட்டம் உனக்கு ஒரே ஆண்டில் வந்துவிடுமே!

[இதைச் சாலி கேட்டுத் திடுக்கிடுகிறாள். அவள் தனக்குள்]

முல்லை அவள் மேல் அன்பாய் இருந்தது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் இந்தச் சூழ்ச்சி செய்தேன், அதன் பயனாக அவள் நிலாவையடைந்து விட்டால், பிறை நாட்டின் பாராட்டும் புகழ்ச்சியும் கிள்ளைக்குத் தான்!...

[அந்தச் சாலி, அரசனை நோக்கிக் கூறுகிறாள்]

பேரரசே! குற்றவாளியாகிய கிள்ளை அந்தப் பீலி நாட்டில் ஆடல் கற்றுக் கொள்ளலாகாது என்று தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

[அரசர் முதல் அனைவரும் சிரிக்கின்றனர். சாலியின் தந்தையான அமைச்சன் முகம் கவிழ்ந்து கொள்ளுகிறது]

அரசர்: சாலி, உனக்கு யார்மேல் எப்படிப்பட்ட கெட்ட எண்ணம் உண்டாகிறதோ அதையெல்லாம் நான் தீர்ப்பாகச் சொல்லித் தீர்த்துவிட வேண்டுமோ? உன் வாய்ச் சொல்லைக் கொண்டு கிள்ளையைத் தண்டித்தது சரியில்லை என்று நன்றாக விளங்கி விட்டது.

கிள்ளை: அப்படியானால், தாங்கள் எனக்களித்த தீர்ப்பை மாற்றவா போகிறீர்கள்?

[அனைவரும் சிரிக்கிறார்கள்]

அரசர்: அஞ்ச வேண்டாம். அப்படி ஒன்றும் இல்லை.

கிள்ளை: நான் இப்போதே தானே போய் விட வேண்டும்? இப்படித் தான் தீர்ப்பளித்தீர்கள் என்று என் தந்தையாரிடம் நான் சொன்னால் அவர் நம்பமாட்டார். வேண்டுமென்று நானே சொல்லுவதாக அவர் நினைப்பார். அவரையும் அழைத்துத் தீர்ப்பைச் சொல்லி விடும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

முல்லை: ஆம் ஆம்!

[மீண்டும் சிரிப்பு]

இதற்குள் பேரரசியார் மன்று நோக்கி வருவதாகக் கூறத் தோழி ஒருத்தி அங்கு வருகிறாள். அவளை அனைவரும் நோக்கியிருக்கிறார்கள்.

தோழி: பேரரசே! பேரரசியார் மன்று நோக்கி வருகிறார்கள்.

[அனைவரும் எழுந்து நிற்கிறார்கள். அரசியார் அரசரிடம் கணையாழியை நீட்டுகிறார்]

பேரரசி: அகப்பட்டு விட்டது. கிள்ளை குற்றவாளியல்ல.

கிள்ளை: அதெப்படி? தீர்ப்பை மாற்றக் கூடாது பேரரசே!

அரசர்: நீ குற்றவாளி என்றுதானே அந்தத் தீர்ப்பைச் செய்தேன். இப்போது நீ குற்றவாளியில்லை, தீர்ப்பை மாற்றத்தானே வேண்டும்?

கிள்ளை: நான் தீர்ப்பளிக்கு முன் எப்படியோ அப்படித்தான் இப் போதும் அப்போதைக்கு இப்போது என்ன வேறுபாட்டைக் கண்டீர்கள்?

அரசர்: தீர்ப்புக்கு முன் இருந்த நிலையில் நீ இப்போது இல்லையே!

கிள்ளை: நான் இப்போதும் குற்றவாளியில்லை. அப்போதும் குற்றவாளியில்லையே. தீர்ப்பை ஏன் மாற்ற வேண்டும்?

அரசர்: அப்படியா நீ சொல்வதும் ஒரு வகையில் சரியே நீ என்ன சொல்கிறாய், சாலி!

சாலி: நான்தான் குற்றவாளி, எனக்குத்தான் அந்தத் தீர்ப்பை ஏற்பாடு செய்யவேண்டும்.

அரசர்: அது ஏன்? நீ எப்படிக் குற்றவாளி?

சாலி: நான்தான் முதலில் அந்தக் கணையாழியை எடுத்தேன். பிறகு வைத்து விட்டேன். ஆகையால் நான்தான் குற்றவாளி.

[சிரிப்பு]

பேரரசி: எவ்விடத்திலிருந்து எடுத்தாய்?

சாலி: அங்கு தான்...

பேரரசி: எங்கு?

சாலி: தாங்கள் நீராடும் கட்டத்தின் இப் புறமிருந்த கண்ணாடிச் சிலையின் கீழிலிருந்து எடுத்தேன்.

பேரரசி: எங்கு வைத்தாய்?

சாலி: அங்குதான் வைத்தேன்.

பேரரசி: இல்லை இல்லை. நீ கணையாழியை எடுக்கவுமில்லை; வைக்கவுமில்லை. ஆடல் கற்றுக் கொள்ள விரும்புகிறாய் நிலாவிடம் பாவை விளக்கின் அடியில் கணையாழியை நான் வைத்து மறந்தேன். இப்போது தான் நினைவு வந்தது.

அரசர்: ஆனால், நான் உனக்குத் தீர்ப்புக் கூறட்டுமா சாலி?

கிள்ளை: எனக்களித்த தீர்ப்பு மாறுதல் கூடாது!

அரசர்: அதையும் மாற்றித்தானாக வேண்டும். கேளுங்கள் சாலி நல்ல பெண்ணாகிய கிள்ளை மேல் பொய்ப்பழி கூறியதால் சாலி கிள்ளையை மன்னிப்புக் கேட்க வேண்டும். இந்தத் தீர்ப்பு நிறைவேறிய பின், அரண்மனைப் பொருளில் ஆடல் அரங்கு ஒன்று அமைத்து, இந்நாட்டின் ஆடற்சாலை முன்னேற்றத்திற்கு,

நிலாவை வரவழைத்து கிள்ளை, சாலி முதலிய அனைவர்க்கும் சொல்லி வைக்கச் செய்ய வேண்டும்! என்ன!

கிள்ளை: சாலி, என்னை மனனிப்புக்கேள் விரைவில்.

சாலி: மன்னிக்க வேண்டும் – எங்கே பேரரசே, ஆடல் அரங்கம்?

அரசர்: ஆடற்கலை நம் நாட்டில் எழுக. குழந்தைகளே உங்கள் விருப்பம் நன்று. இதோ அனைத்தும் ஏற்பாடு செய்துவிடுகின்றேன்.

காட்சி 3

[பிறை நாட்டில் புதிதாக அமைத்த அரங்கில், நிலாவினால் பயிற்றப்பட்ட பெண்கள், கிள்ளை, சாலி, தாழை, தோரை, முல்லை முதலியவர்கள் ஆடுகின்றார்கள்.]

நிலா பாடுகிறாள்.

செங்கதிர் எழுந்தான் திரைக்கடல் மேலே
சிரிக்கும்செந் தாமரை போலே!

எங்கணும் ஒளியே! எங்கணும் உணர்வே!
இனிதாய் மலர்ந்தது காலை!

ஏரினைத் தூக்கி உழவர்கள் தொடர்ந்தார்!
எருதுகள் முன்செல்ல நடந்தார்!

ஊரினிற் பெண்கள் நீர்க்குடம் சுமந்தே
உவப்புடன் குளக்கரை அடைந்தார்!

வாணிகர் கடைகளைத் திறந்திடு கின்றார்

மாணவர் ஏட்டோடு சென்றார்.
வீணையைப்போல் அங் காடிகள் கூவி
வீதியெல்லாம் நடக் கின்றார்.

எழுந்தன அறங்கள் நிறைந்தன அன்பும்!
ஏகின ஏகின துன்பம்!

பொழிந்தன பொழிந்தன தமிழரின் நாட்டில்
புதுமைகள்! எங்கணும் இன்பம்!

பாரதிதாசன் முன்னுரை

அமைதி என்னும் இச்சிறு நர்டகம், நாடக உறுப்பினர் — நடிகர் எவருக்கும் பேச்சில்லாது நிகழ்ச்சிகளைக் கண்ணால் காணுவதால் மட்டும் கருத்தறியுமாறு அமைக்கப் பெற்றுள்ளது. ஆதலின், இதை ஊமை நாடகம் என்றேன். நடிகர் அனைவரும் ஊமைபோல் நடித்ததாலும், ஊமை களைக் கொண்டும் இந்நாடகத்தை நடைபெறுவிக்கலாம் ஆதலினாலும் ஊமை நாடகம் என்றது பொருந்துவதாகும்.

இந்நாடகம் எம்மொழியராலும் நடத்துவிக்க முடியும். கருத்துக்களும் உலகப்பொதுவானவை!

— பாரதிதாசன்

அமைதி

ஏழெட்டுக் கூரை வீடுகள்! புல்லடர்ந்த தரையில் சில தேய்ந்த வழிகள்! இடையிடையே மரங்கள், செடிகள், கொடிகள்! கூரைகளைச் சுற்றி வளைந்தோடும் வாய்க்கால்! அங்கும் இங்கும் திரியும் ஆடுகள், கோழிகள், நாய்கள்.

ஒரு கூரை வீட்டின் எதிரில் பிணப்பாடை கட்டுகிறார்கள், ஒருவன் துன்ப முகத்துடன் உள்ளே போவதும் வெளியில் வருவது மாக இருக்கிறான். வீட்டின் வெளிப்புறம் பத்துபேர் குந்தியிருக் கிறார்கள்.

இறந்த கிழவியை வீட்டினுள்ளிருந்து சிலர் தூக்கி வரு கிறார்கள். சில பெண்டிர்கள் உடன் வருகிறார்கள். பிணம் தூக்கப் படுகிறது. அந்தத் துன்ப முகத்தினன் தன் இடையில் செருகி வைத் திருந்த சாவியை எடுக்கிறான். வீட்டிலிருந்த பெண்டிர்கள் வெளிச் செல்கிறார்கள். வீட்டை இழுத்துப் பூட்டிவிட்டுப் பிணத்தோடு நட்ட தனியினனாய் நீர் ஒழுகும் கண்ணினனாய் நடந்து செல்லுகிறான். அவன் பெயர் மண்ணாங்கட்டி.

இரண்டு

பிணத்தோடு சென்றவர்கள், மண்ணாங்கட்டியுள்ள வீடு நோக்கி வருகிறார்கள். மண்ணாங்கட்டி தன் வீட்டுக் குறட்டில் நின்று கைகூப்ப, பிணத்தோடு சென்று மீண்ட அனைவரும் கைகூப்பிச் செல்லுகிறார்கள்.

மண்ணாங்கட்டி, வீட்டைத் திறக்கிறான். வீட்டின் உட்புறம் பல பொருள்களையும் பார்க்கிறான். கண்ணீர் சொரிகிறான். ஒருபுற மிருந்த பெட்டியைத் திறக்கிறான். அதிலிருந்து காசுகள் அனைத்தை யும் தன் மடியில் வைத்துக் கொள்ளுகிறான். ஓர் எழுதுகோல் சிறிது தாள் எடுக்கிறான். ஒரு புறம் உட்கார்ந்து சிறு தாள் கிழித்து அதில் ஏதோ எழுதுகிறான். எழுதுகோலையும் மற்றும் சிறிது தாளையும் மடியில் வைத்துக் கொள்ளுகிறான்.

அவன் கண்ணெதிரில் கொடியில், ஒரு பழம் புடவையும், ஒரு வேட்டி ஒரு துண்டும் காட்சியளிக்கின்றன. அவற்றை மடித்துக் கைப் புறம் வைத்து வெளி வருகிறான். வீட்டைப் பூட்டிக் கொள்ளுகிறான். தலையில் முக்காடிட்டு நடக்கிறான்.

மூன்று

ஏழெட்டுக் குடிசைகளில், கடைசியில் உள்ள ஒரு பொத்தற் குடிசையின் பின்புறமாக மண்ணாங்கட்டி நின்று, பொத்தற் குடிசை யின் உள்ளே பார்க்கிறான். இரக்கம் கொள்ளுகிறான். தன் வீட்டுச் சாவியையும் தான் எழுதிய தாளையும் குடிசையின் உள்ளே போட்டுச் சிறிது தொலைவில் சென்று ஓர் மரத்தடியில் நிற்கிறான். பொத்தற் குடிசையைப் பார்த்தபடி!

பொத்தற் குடிசையின் உள்ளே இருந்து ஒருவன் தன் கையில் சாவியுடனும், மண்ணாங்கட்டி எறிந்த ஏட்டுடனும் வெளி வருகிறான். அவன் மற்றும் ஒரு முறை ஏட்டைப் படிக்கிறான். அவன் கண்கள் வியப்பில் ஆழ்கின்றன. அவன் மகிழ்ச்சியால் விரைவாக மண்ணாங் கட்டியின் வீட்டைத் திறக்கிறான். சுற்றிலும் பார்க்கிறான். மீண்டும் கதவைப் பூட்டிக் கொண்டு தன் பொத்தற் குடிசையை அடைகிறான். உடனே அவனும் மற்றொருத்தியும் பொத்தற் குடிசையிலிருந்து தட்டு முட்டுக்களுடன் மண்ணாங்கட்டியின் வீட்டை அடைகிறார்கள். இவற்றை மண்ணாங்கட்டி கண்டு உள்ளம் பூரித்துச் செல்கிறான் ஊரின் புறத்தே.

நான்கு

அடுத்த சிற்றூரில் நுழைகிறான். பகலவன் மேற்றிசையில் விழுகிறான். பறவைகள் தழை கிளைகளில் அடங்குகின்றன. குடிசை களில் விளக்கேற்றப்படுகின்றது. பனி புகைகின்றது. ஊரின் பொதுச் சாவடியில் ஒரு கிழவி மேலாடையின்றித் தன் கையால் மெய்போர்த்துக் குளிரால் நடுங்கியபடி மூலையில் ஒண்டியிருக் கிறாள். மண்ணாங்கட்டி காணுகிறான். அவன் முகம் துன்பத்தை யளாவுகின்றது.

கிழவியின் எதிரில் ஒரு பழம்புடவை வந்து வீழ்கிறது. அவள் சுற்றும் முற்றும் பார்க்கிறாள் புடவையை மகிழ்ச்சியுடன் எடுத்து விரித்துப் போர்த்திக் கொள்ளுகிறாள். அவளின் இருண்ட விழிகளை ஒளி தழுவுகின்றது. புடவை போர்த்த தன் அழகைத் தானே பலமுறை குனிந்து குனிந்து பார்த்து மகிழ்கிறாள். பற்கள் இல்லாவிடினும் உதடுகளால் சிரிக்கிறாள்.

மண்ணாங்கட்டிக்கு இஃதோர் இன்பக் காட்சி! சிரித்த முகத்தோடு அவன் மேலும் நடக்கிறான்.

ஐந்து

நள்ளிருளில் ஒரு குடிசையில் ஒற்றை விளக்கு எரிகிறது. தரையிற் குந்தித் தலையிற் கை வைத்துக் கண்ணீர் சிந்துகின்றான் ஒருவன். அறையிலிருந்து ஒருத்தி ஒரு சின்னஞ் சிறு மூட்டையுடன் வெளிவந்து கொல்லைப்புறக் கதவு திறந்து வெளிச் செல்லுகிறாள். அவள் சிறிது தொலைவில் தனியே சென்று ஒரு வேலிப்புறத்தில் தன் கையிலிருந்த மூட்டையை மெதுவாகத் தரையில் வைத்துப் போகிறாள். மண்ணாங்கட்டி அம் மூட்டையைச் சென்று எடுத்துப் பிரித்துப் பார்க்கிறான். அவன் மேனி நடுங்குகிறது. குழந்தையைத் தன் மேலுடையால் மறைத்து எடுத்துப் போகிறான்.

சற்றுத் தொலைவில் ஒரு குளத்தைக் காணுகிறான். அதில் குழந்தையின் செந்நீர் தோய்ந்த மேனியைக் கழுவுகிறான். கொப்பூழ்க் கொடியைக் களைகிறான். உடையால் ஒற்றி வேறு உடை போர்த்துக் கைப்புறத்தில் அணைத்தபடி செல்லுகிறான்.

அங்கொரு தொழுவம் காணுகிறான். அதில் உள்ள ஒரு பசுவைக் காணுகிறான். குழந்தையை ஒரு புறம் படுக்க வைத்து விட்டுப் பசும்பாலைத் துணி நனையக் கறந்து குழந்தையின் வாயிற் பிழிந்து உண்பிக்கிறான். சற்றுத் தொலைவில் குழந்தையுடன் செல்லுகிறான். ஊர்ப் பொதுச் சாவடி ஒன்று காணுகிறான். ஊர் பொதுச் சாவடியில் சிலர் மூட்டை முடிச்சுகளுடன் துயிலுகிறார்கள். ஆயினும், அவர்களில் ஒரு கணவனும் மனைவியும் துயில் நீங்கி எழுந்து மற்றவர்கள் துயில்வதையும் அவர்களின் அண்டையில் மூட்டை முடுச்சுக்கள் கேட்பாரற்றுக் கிடப்பதையும் பார்க்கிறார்கள். அந்த மூட்டைகளிற் சிலவற்றை திருடிச்சென்று சிறிது தொலைவிலுள்ள ஆலமரத்தின் வேரில் மறைத்து மீண்டும் துயில்வாரோடு தாமும் வந்து துயில்கிறார்கள்.

கிழக்கு வெளுக்கிறது. ஆலமரத்தை நோக்கி ஒரு கணவனும் அவன் மனைவியும் சுற்று முற்றும் பார்த்தபடி வருகிறார்கள். அவர்கள் திருடிப் பதுக்கிய மூட்டைகளைக் காணுகிறார்கள். அம் மூட்டைகளின் அண்டையில் வண்டு விழிகாட்டி மலர்முகம் காட்டிச் சிறிய மலர்க் கைகளும் கால்களும் அசைத்துக் கிடக்கும் ஒரு குழந்தையையும், குழந்தையின் அண்டையில், சில தங்க நகைகளும் பணமும் கிடப்பதையும் காணுகிறார்கள். மனைவி குழந்தையை வாரி அணைத்து முத்தமிடுகிறாள். கணவன் முகம் மகிழ்ச்சி கொள்ளுகிறது. ஆலமரத்தின் மேல் ஒரு நெஞ்சம் பூரித்துப் போகிறது.

பிள்ளையையும், பணம், நகை மூட்டைகளையும் எடுத்துக் கொண்டு கணவனும் மனைவியும் போகிறார்கள். ஆலமரத்தை விட்டு இறங்கிய மண்ணாங்கட்டி வேறு புறம் செல்லுகிறான்.

ஆறு

மண்ணாங்கட்டி ஒரு சிற்றூரை அடைகிறான். இளங்கதிர் கடலை விட்டு எழுகிறது. அவன் நடக்கிறான். அவன் கண்கள் நாற்புற நிகழ்ச்சிகளையும் துழாவுகின்றன.

அங்கோர் வண்டிக்காரன் ஏறுகால்மேல் உட்கார்ந்து மாடுகளை ஓட்டுகிறான். வண்டியில் ஏற்றிய பூச்சுணைக்காய் பின்புறத்தில் நழுகுகின்றது ஆயினும், அது விழுமுன் ஏந்தி முன்னிருந்த இடத்தில் வைக்கின்றன மண்ணாங்கட்டியின் கைகள்.

தெருத்திண்ணைமேல் தூணிற் கட்டப்பட்ட கன்றுக்குட்டி கால் தவறிக் கீழே விழுகிறது. அதன் உடல் பதைக்குகிறது அது தூக்கு மாட்டிக் கொண்ட உடல்போல் தொங்கித் துடிக்கிறது! இந்நிலை அதற்கு ஒரு நொடி. மறு நொடியில் மண்ணாங்கட்டி மீட்சியளித்து அதற்கு முத்தமும் தந்து மகிழ்ந்தபடி நடக்கிறான்.

மண்ணாங்கட்டிக்கு உச்சியினின்று கதிரவன் நெருப்புக் குடை பிடிக்கும் நேரம்! ஒரு குளக்கரையில் இருவர் தலைவிரித்து நிறையச் சோறிட்டு உண்டிருக்கிறார்கள் அக்காட்சியை மண்ணாங்கட்டி பார்க் கிறான் திகைக்கிறான். தன் கையால் அடிவயிற்றைத் தடவுகிறான். அவன் முகம் சுருங்குகிறது.

அப்போது அவன் எதிரில் ஒரு வைக்கோல் வண்டி போகிறது எத்தனை பெரிய வண்டி! அவ்வண்டி மேல் எவ்வளவு வைக்கோல்! இளைத்த இரண்டெருதுகள், மண்டியிட்டு இழுத்துச் செல்கின்றன, அவற்றின் கண்கள்பீளை கக்குகின்றன கடைவாய் நுரை யூற்று!

மண்ணாங்கட்டி பாய்கிறான், வண்டியின் பின்புறம் தன் தலையைப் பொருத்தி உரங்கொண்ட மட்டும் தள்ளிச் செல்கிறான். எருதுகள் துயர் நீங்கி மாப்பிள்ளை போல் நடக்கின்றன. மண்ணாங் கட்டியின் சுருக்க முகம் மலர்கின்றது வண்டி தன் இடத்தையடை கின்றது. மண்ணாங்கட்டி வேறு வழி நோக்கி நடக்கிறான்.

ஏழு

நள்ளிருளில் தனித்திருக்கும் ஒரு வீட்டின் தெருப்புறத்து அறைச்சன்னலின் கம்பிகளை இருவர் விலக்குகிறார்கள். வீட்டின் தெருக்கதவு பூட்டப்பட்டிருக்கிறது. மண்ணாங்கட்டி எதிரிலுள்ள மரத்

தில் மறைந்து பார்த்துக்கொண்டிருக்கிறான். அறையின் உள்ளே ஒருவன் புகுகின்றான். பிறகு வெளிவருகிறான். இருவரும் தெருப் புறத்திலுள்ள மற்றோர் அறையின் சன்னற் கம்பிகளை விலக்கு கிறார்கள். ஒருவன் உள்ளே புகுந்து தவலை ஒன்றை எடுத்து வெளி யிலிருந்தவனிடம் நீட்ட அவன் அதை வாங்கி வைக்கிறான். மற்றும் உள்ளே சென்றவன் வேறு பொருளை எடுக்குமுன் மண்ணாங்கட்டி. வெளியிலிருப்பவன் காணும்படி சற்றுத் தொலைவில் உலவுகிறான். வெளியிலிருப்பவன் மெல்ல நழுகுகிறான். சிறிது தொலைவில் நழுகிய பின், அவனை நோக்கி மண்ணாங்கட்டி, ஒரு கல்லை எறிகிறான். அவன் ஓடிமறைந்து விடுகிறான். மண்ணாங்கட்டி, சன்னலண்டை வந்து நின்று கொள்ளுகிறான். அறையின் உள்ளே சென்றவன் பெரியதும், சிறியதுமாகிய பல பொருள்களை வெளியே நீட்டுகிறான். நீட்டுந்தோறும் மண்ணாங்கட்டி அவற்றை வாங்கி வாங்கி அடுத்த சன்னல் வழியாக அறைக்குள் செலுத்தி விடுகிறான். சோறு நிறைந்த ஓர் குண்டானையும், குழம்பு நிறைந்த குவளையை யும் கடைசியில் உள்ளேயிருந்தவன் கொடுக்கிறான். மண்ணாங்கட்டி அவ்விரண்டையும் சன்னலின் எதிரிலேயே வைத்து விடுகிறான். அவன் அறையைவிட்டு வெளி வருகிறான். மண்ணாங்கட்டி நழுகி எதிரில் மரத்தில் மறைந்து கொள்கிறான். வந்தவன் சோற்றுக் குண்டானையும், குழம்புக் குவளையையும் தூக்கிக்கொண்டு தன் துணைவனைத் தேடிச் சிறிது நகருகின்றான். அவன் இல்லாததால் இன்னும் சிறிது நகருகிறான். உடனே அவனை நோக்கி ஒரு கல் சீறி வந்து எதிரில் விழுகிறது. மற்றொன்று. இன்னொன்று குண்டானோடும் குவளையோடும் அவன் கம்பி நீட்டுகிறான். மண்ணாங்கட்டி வேறு புறமாகச் செல்லுகிறான்.

எட்டு

வெயிலில் தங்கம் போர்த்ததுபோல் ஒரு மலை தோற்றம் அளிக்கிறது. அதன் சரிவில் ஒரு பெருமாள் கோவில் தோன்றுகிறது. கோவில் சூழ ஆயிரக்கணக்கான மக்களின் நடமாட்டம்.

அங்குள்ள ஒரு தோப்பில் ஒரு புறமாக உட்காருகிறான் மண்ணாங்கட்டி.

தோப்பில் பல புறங்களிலும், வியர்வை ஒழுகும் மேனியும் கண் குழிவுபட்ட முகமுமாகப் பலர் காணப்படுகிறார்கள். சிலர் உட்கார்ந் திருக்கிறார்கள் சோர்ந்து! சிலர் படுத்தும் புறள்கிறார்கள் வயிற்றைப்

பிசைந்தபடி! அவர்கள் முகங்கள் ஒவ்வொன்றும் பசித் துன்பத்தால் கருகியிருக்கின்றன.

ஒரு மூலையில் வேறொரு காட்சியை மண்ணாங்கட்டி காணு கிறான்.

புன்னைமரத்தின் நன்னிழலில் பொன்னிழை கலந்து நெய்த துகில் விரித்து அதன் மேல் மணியிழை மின்னும் ஒருத்தியும், தங்கத் துகில் சரிந்து வீழ வெயில் வீசும் மார்பணி துலங்க, அருகமர்ந்த ஒருவனும் மகிழ்ந்திருக்கின்றனர். அவள் பாலில் துவைத்த ஒப்பிட்டை அவன் வாயில் அப்பிக் கொண்டிருக்கிறான். அவர்கள் எறிந்த நெய்யொழுகும் பண்ணியமும் அப்பமும் எதிரில் நாய்கள் தின்று தெவிட்டுதல் அடைகின்றன.

மிகுபலர் துன்பமுறுகின்றனர். மிகச் சிலர் இன்பமுறுகின்றனர். மண்ணாங்கட்டி காணுகின்றான். புன்னைமரத்தடியை விட்டு மண்ணாங்கட்டியின் உள்ளம் இப்பெரு வையத்தை நோக்குகின்றது:

அங்கு மிகுபலர் துன்புறுகின்றனர், மிகச் சிலர் இன்புறு கின்றனர். சிறிது நேரம் சென்றது மண்ணாங்கட்டி மரத்து நிழலில் தூங்குகிறான்.

ஒன்பது

இருள்! பெருமாள் கோவில் மடப்பள்ளியின் தெருப்பக்கத்துச் சன்னல் திறக்கப்படுகிறது! உட்புறமிருந்து ஒரு பெருந்தட்டு வெளிப்புறம் நீட்டப்படுகிறது! அந்தச் சன்னலில் கருத்தின்றி ஒரு பெண் சற்று தொலைவில் மற்றொருவனின் தோளில் கைவைத்தபடி நிற்கிறாள். மண்ணாங்கட்டி வெளிப்புறமிருந்து தட்டை வாங்கிப் போகிறான்!

பெண்ணை விட்டுக் காளை பிரிகிறான். பெண்ணாள் கண் பூத்துப் போக நெடு நேரம் சன்னலை நோக்கி நிற்கிறாள். அவள் கைகளை முறித்துக்கொண்டு செல்கிறாள்.

மண்ணாங்கட்டி, தட்டிலிருந்து பொங்கலில் வேண்டுமட்டும் அருந்துகிறான். மீந்ததை ஒருபுறம் உட்கார்ந்து தூங்கி விழும் நொண்டியின் எதிர்வைத்து நடக்கிறான். நொண்டி விழித்துப் பொங்கலை மகிழ்ந்துண்ணுகிறான்.

பத்து

மண்ணாங்கட்டியின் எதிரில் ஒரு பெரிய ஊர் தோன்றுகிறது. வானைத் தொடுகின்ற இரண்டு மாடி வீடுகள் தோன்றுகின்றன. இவ்விரண்டு மாடி வீடுகளும் தம்மில் நெருங்கியிருக்கவில்லை. இரண்டுக்கும் நடுவில் ஒரு கல் தொலைவு இடைவெளியிருக்கலாம். மண்ணாங்கட்டி ஊரில் நுழைகிறான். ஊர்ப்புறத்தில் புல்லற்ற வெளியில் சில மாடுகள் மேய்கின்றன. அவை எலும்பும் தோலுமாய்த் தோன்றுகின்றன. தெருக்களைக் காணுகிறான். நிறையப் பொத்தற் குடிசைகள்; தெருக்களில் தீனியின்றி மண்ணைக் கொத்தித் தின்னும் இளைத்த கோழிகள் மேய்கின்றன. ஆடையின்றி விலாவெடுத்த சிறு குழந்தைகள் மண்ணிற் கிடக்கின்றன. குலைக்கவும் வலிவின்றி நாய்கள் மண்ணாங்கட்டியைக் கண்ணாற் பார்த்துப் பழையபடி புறங்கால் இடுக்கில் தலைவைத்துச் சுருண்டு படுக்கின்றன.

பேச்சுக் குரலற்ற குடிசைகளை காணுகிறான். சில குடிசைகளை அவன் எட்டிப் பார்க்கின்றான். பூனை தூங்கும் அடுப்புகள், ஈரமற்ற முற்றங்கள், ஒட்டடை நிறைந்த அடுக்குப் பானைகள் காட்சியளிக் கின்றன. அவன் விழிகளில் இரக்கமும் வியப்பும் மாறி மாறி தோன்றுகின்றன.

ஒரு மாந்தோப்புத் தோன்றுகின்றது. மரங்களில், காயில்லை. வண்டுகளும், பூவும் இருக்கின்றன. ஏழை மக்கள் சிலர் மாவடு, பூ, தளிர் இவைளைக் கையால் தாவிப் பறித்து உண்கிறார்கள். அவர்களின் கண்கள் எவனுக்கோ அஞ்சுகின்றன.

ஒருவன் கையில் தடியுடன் வருகிறான். மக்கள் ஓடி ஒளிகிறார் கள். வேறு புறம் மண்ணாங்கட்டி செல்லுகிறான்.

பழுக்காத பனங்காயைப் பலர் பல்லாற் கடித்துக் கிடக்கின்றனர். மற்றும் சிலர் பச்சோலையைத் தின்கின்றனர். மண்ணாங்கட்டி மெய் நடுங்குகிறான். அவன் மறுபுறம் நடக்கின்றான்.

பெரியதோர் மாடிவீடு, அதையடுத்துப் பல "பொருட்காப்பு விடுதி" கள் தோன்றுகின்றன. மாடி வீட்டின் வாயிலில் நிறைய மக்கள் கெஞ்சிய முகத்தோடும் துணி விரித்து ஏந்திய கையோடும் மொய்த் திருக்கின்றார்கள். சிலர் கூழ் ஏந்தும் சிறு பானையுடன் ஏங்கியிருக் கின்றனர். வேறு புகல் இல்லையென்னும் நிலையில் பலர் வாயிலின் நேரில் உட்கார்ந்திருக்கின்றனர். மற்றும் பலர் உட்கார்ந்திருக்க வலி வின்றிப் படுத்திருக்கின்றனர். மண்ணாங்கட்டி நின்று பார்க்கிறான். அவன் முகம் கருமையடைகின்றது. சிறிது நேரம் செல்ல, மாடி

வீட்டினின்று ஒருவன் கையிற்கோலுடன் ஏழை மக்களை நோக்கிச் சினத்துடன் வருகின்றான். மக்கள் அஞ்சிப் பறக்கின்றார்கள். அவன் உள்ளே போகின்றான். மீண்டும் ஏழை மக்கள் மாடி வீட்டை மொய்க்கின்றார்கள். மண்ணாங்கட்டி மேலும் நடக்கின்றான் விரைவாக!

ஒரு கல் தொலைவு செல்லுகின்றான். மற்றொரு வீட்டைக் காண்கின்றான். அங்கும் காணுகின்றான் கையேந்தி நிற்கும் ஏழை மக்களை. மண்ணாங்கட்டி ஆவலுடன் எதையோ பார்க்கிறான். நடக்கிறான் மேலும்! ஊரின் மேற்குப் புறத்தில் ஏரிக்கரையை அடைகிறான்: ஏரியைச் சுற்றிச் சுற்றிப் பார்க்கின்றன அவன் விழிகள். அவன் முகத்தில் சிறிது மகிழ்ச்சியரும்புகின்றது. ஏரி நிறைய நீர் இருக்கிறது. ஏரியின் மறுமுனையைப் பார்க்கிறான். ஊர் தோன்றுகிறது. அவ்வூருக்கும் இந்த ஏரிக்கும் இடையில் தடைச் சுவர் ஒன்று மட்டமாய்க் கட்டப்பட்டிருப்பதை அறிகிறான். மற்றும் ஏரியின் அருகில் குறவர் குடிசைகள் தோன்றுகின்றன. உற்றுப் பார்க்கிறான் மண்ணாங்கட்டி. ஒரு குறவன் மூட்டம் போட்டு அதில் உயிருடன் நாய் ஒன்றை வதக்கிக் கொண்டிருக்கிறான். அதன் தசையை எதிர்பார்த்து பல குறவர் ஏங்கி நிற்கிறார்கள். மண்ணாங்கட்டி விரைந்து சென்று குடிசையொன்றில் நுழைகிறான். சிறிது நேரத்தில் அக்குடிசையினின்று ஒரு குறவன் வெளிச் செல்லுகிறான். அவன் உடனே பல குறவர்களுடன் தன் குடிசைக்குள் நுழைகிறான். பகலவன் மேற்றிசையில் வீழ்கிறான். கையெழுத்து மறைகிறது. பல குறவர்கள் மண்ணாங்கட்டியுடன் செல்லுகிறார்கள் கையில் கடப்பாரைகளுடன்.

ஏரியின் அக்கரையில் கட்டப்பட்டிருக்கும் தடைச் சுவர் இடிபடுகின்றது. மண்ணாங்கட்டியின் தோள் விரைவாக அவ்வேலையில் ஈடுபடுகின்றது. குறவர்கள் தம்தலைவருடன் போட்டியிடுகின்றார்கள். மண்ணாங்கட்டி ஏரியைப் பார்க்கிறான். அவன் மகிழ்ச்சி கொண்ட முகத்தை மற்றும் காண்கிறார்கள். குறவர்களும் மண்ணாங்கட்டியும் குறவரின் குடிசைகளை நோக்கிச் செல்கிறார்கள்.

சிறிது நேரத்தில், ஒருவன் சுளுந்தக்கழி கொழுத்தியபடி இடிக்கப்பட்டிருக்கும் தடைச் சுவரைப் பார்க்கிறான். ஏரியின் மறுமுனையில் தோன்றும் ஊரை நோக்கி விரைந்து செல்லுகிறான்! உடனே சுளுந்தக்கழி கொளுத்திப் பிடித்தவனும் ஊர்ப்பெரியவர்களும் தடைச் சுவரை ஆராய்கிறார்கள். அவர்கள் கண்ணில் தீப்பொறி பறக்கிறது. அவர்கள் தம் எதிரில் தோன்றும் இரண்டு மாடிகள் உள்ள ஊரை நோக்குகிறார்கள்.

மீண்டும் குறவர்களுடன் மண்ணாங்கட்டி செல்கிறான். ஏரிக்கரை இடிபடுகின்றது. தண்ணீர் உடைந்த தடைச்சுவரைத் தாண்டி அவ்வூரில் நுழைகிறது. இடையில் பரந்த வயல் அனைத்தும் வெள்ளம். அவ்வூரிற் சென்ற அளவு இவ்வூரிலும் வெள்ளம் புகுகின்றது. மண்ணாங்கட்டி குறவர்களுடன் செல்லுகிறான்!

பதினொன்று

மாடி வீட்டின் பெருங் கதவு திறக்கப்படுகின்றது. பெரிய பண்ணையார் முறுக்கிய மீசையுடன் விரைவாக வெளிவருகிறார். அவர் மனைவி அணிகளையும் தன் அழகையும் சுமந்து வெளி வருகின்றாள். இருவரும் தெரு நடுவில் நின்று கையில் மண் வெட்டியையும் சிவப்புத் துணியையும் தூக்கி அசைத்துக் காட்டு கிறார்கள். ஊர் மக்கள் மண்வெட்டி, தட்டு, பாரை தூக்கி ஏரி நோக்கி ஓடுகிறார்கள்.

மற்றொரு மாடி வீட்டினின்று சின்ன பண்ணையார் அவருடைய அழகற்ற மனைவியும் அவ்வாறே அடையாளங் காட்ட அங்குள்ள மக்களும் ஏரியை நோக்கி ஓடுகிறார்கள் கருவிகளுடன்.

இரு பண்ணையார்களின் நூற்றுக்கணக்கான ஆட்கள், பெரு மிடாக்களில் அரிசியைக் கழுவிப் போட்டுச் சோறாக்குகிறார்கள். ஏரியில் வேலை செய்யும் ஊர் மக்கட்கு வாழையிலை திருத்தப் படுகிறது. சோறு இட, கரிகள் அரிகிறார்கள் குழம்பு வைக்க, நூற்றுக் கணக்கான அடுப்புகள் எரிகின்றன. தாளிப்பு மணம் கமகம என்று எழுகின்றது நாற்புறத்தும்.

அனைத்தும் ஊர்மக்கட்கு! மகிழ்ச்சியுடன் திரிகிறான் மண் ணாங்கட்டி. அவன் ஏரிக்கரை செல்கிறான். ஊர் மக்கள் ஏரிக்கரை செப்பனிடுவதைப் பார்க்கிறான். மீண்டும் ஊருக்குள் வருகிறான். சோறு கறிகள் இலையில் வரிசை வரிசையாக வட்டிக்கப்படுவது காணுகிறான். பசிகொண்ட நாய்கள் தாமே சோற்றண்டையில் சூழ்ந் தன. பசிகொண்ட மக்களோ பண்ணையார்கள் கையசைக்க வந்து சேர்ந்தனர்.

அனைவரும் உணவருந்துகிறார்கள். மண்ணாங்கட்டி அள் ளூறிப் போகிறான், மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. உண்ணும் மக் களைச் சுற்றி சுற்றி வருகிறான். விலாப்புடைக்க உண்டு எழுகிறார் கள் ஊர் மக்கள். அவர்கள் வாய் நிறைய வெற்றிலைப் பாக்கிட்டு மெல்லுகிறார்கள். அவர்கள் முகங்கள் பொலிவுறுகின்றன. முது கெலும்பை ஒட்டிய வயிறு முற்புறம் பெருத்திருப்பதை மண்ணாங்

கட்டி கடைக்கண்ணால் பார்த்துப் பார்த்துக் கடையுதட்டால் சிரிப்பை ஒழுக விடுகிறான். அனைவரும் ஏரி நோக்கிச் செல்லுகிறார்கள். வேலை தொடங்குகிறார்கள். மாலை வேளைச் சோறு சமைக்கத் தொடங்குகிறார்கள் பண்ணையாட்கள். மண்ணாங்கட்டி தான் சாப்பிட மறந்து போனதைத் தன் வயிற்றைத் தடவிய அவன் கைகள் காட்டுகின்றன.

மாலைப் போதில் மீண்டும் ஊர் விருந்து மண்ணாங்கட்டிக்கு உட்பட நடக்கிறது.

பன்னிரண்டு

மாலையில், மண்ணாங்கட்டி ஏரிக்கரையண்டையில் நின்று வேலை நடப்பதைப் பார்க்கிறான். நாளை வேலை தீர்ந்து விடும் நிலையில் இருப்பது அவனுக்குத் தெரிகிறது. ஊர் மக்கள் ஏரிக்கரையைக் கட்டுவதில் சுறுசுறுப்பாக வேலை செய்வதைப் பார்க்கிறான். அவன் விழிகள் நினைப்பில் தோய்கின்றன. பகலவனும் மேற்கில் மறைகிறான். ஊரில் நுழைகிறான்.

பெரிய பண்ணையார் வீட்டு மாடியில் பொருத்தப்பட்டிருக்கும் மணிப்பொறியின் முட்கள் இரவு 9 என்று காட்டுகின்றன. மண்ணாங்கட்டி அப்பெரு வீட்டை ஒரு சுற்றுச் சுற்றி வருகிறான். மேலும் அவன் அவ்வீட்டின் பக்கவாட்டில் நின்று வீட்டின் உயரத்தைக் கண்ணால் அளக்கிறான்!

அப்பெரு வீட்டின் மாடியில், ஒரு கூடம். அங்கு சாப்பாட்டு மேசை, நாற்காலிகள், அலமாரி, ஒருபுறம் இரண்டு கட்டில்கள், விளக்கொளியில் காட்சியளிக்கின்றன. பெரிய பண்ணையார் அங்கு வந்து மேசையின் எதிரில் உட்காருகிறார். ஆட்கள் சாப்பாட்டுக்குரிய கறிகள் முதலியவைகள் கொண்டு வந்து வைத்துப் போகிறார்கள். பெரிய பண்ணையாரின் அழகு மனைவி வருகிறாள். அவள் இரண்டு பேருக்கு உணவு படைக்கிறாள். அலமாரியைத் திறக்கிறாள். சாராயச் சீசாவை எடுத்துக் கணவன் எதிரில் உள்ள ஏனத்தில் ஊற்றுகிறாள். அவன் குடிக்கிறான். மேலும் மேலும் ஊற்றுகிறாள். அவளும் அவனும் சோறு உண்ணத் தலைப்படுகிறார்கள். இடையிடையே இடது கையால் தன் கணவனுக்குச் சாராயம் ஊற்றிக்கொடுக்க அவன் குடித்துத் தலை சாய்கிறான். அழகி தன் கணவனைத் தூக்கி, அடுத்துள்ள ஒரு கட்டிலில் போடுகிறாள். அவன் உயிரற்றவன் போல் ஆகிறான். மனைவி, உண்டு கைகழுவி அணிமாற்றி அணிந்தும் உடைமாற்றி உடுத்தும், கண்ணாடி பார்த்துத் தலைசீவியும், முகந்திருத்தியும் ஒரு

கருநிறமுள்ள மெல்லிய பட்டு உடையால் முக்காடிட்டு மாடியை விட்டு இறங்குகிறாள். இதையெல்லாம் மாடியின் சன்னலில் ஒன்றிப் பார்த் திருந்த மண்ணாங்கட்டியும் அவள் இறங்குமுன், கீழிறங்கி வீட்டின் கொல்லைப்புறத்தில் ஒருபுறம் ஒளிந்து நிற்கிறான். பெரிய பண்ணை யாரின் வீட்டுக் கொல்லைப்புறக் கதவு திறக்கப்படுகிறது. பெரிய பண்ணையின் மனைவி வெளியே வருகிறாள். அங்கு வந்து நிற்கும் ஒரு வண்டியில் ஏற வண்டி சின்ன பண்ணையை நோக்கிப் போகிறது. மண்ணாங்கட்டியும் தொடர்கிறான்.

சின்ன பண்ணையாரின் வீட்டைத் தாண்டிச் சிறிது தொலைவில் கட்டப்பட்டிருக்கும் ஒரு கோடை விடுதியின் எதிரில் வண்டி நிற்கிறது. அங்கு காத்திருந்த சின்ன பண்ணையாரால் அவ்வழகிய மங்கை அள்ளிக்கொண்டு, போகப்படுகிறாள் விடுதிக்குள்.

பதின்மூன்று

மறுநாள் ஏரியில் மக்கள் வேலை செய்வதையும், வேலை செய் வோருக்குச் சோறு ஆக்கப்படுவதையும் பார்த்துக் கொண்டு அன்றிரவு பின்புறமாக மாடியில் ஒரு பூனைக்குட்டியுடன் வீட்டின் மாடியில் ஏறு கிறான்.

பெரிய பண்ணையார் சாப்பாட்டு மேசையின் எதிரில் வந்து உட் காருகிறார். அவர் எதிரில் ஒரு பூனைக்குட்டி, உலவுகிறது! அதன் கழுத்தில் ஒரு கடிதம் தொங்குகிறது. பூனைக்குட்டியைப் பிடித்து அந்தக் கடிதத்தைப் படிக்கிறார். அவர் முகம் எரிகிறது. என்னமோ நினைக்கிறார். கடிதத்தை மேசை மேல் வைத்துவிட்டு, அலமாரியைத் திறந்து சாராயச் சீசாவை எடுத்து, அதைத் திறந்து சாராயத்தை யெல்லாம் நீர் விழும் தூம்பில் ஊற்றிவிட்டு அதில் நிறையத் தண்ணீர் ஊற்றி எதிரில் வைத்துக் கொள்ளுகிறார். கறிகள், சோறு வரு கின்றன. மனைவி வருகிறாள். சாராயம் என்று எண்ணி, தண் ணீரை ஊற்றி ஊற்றிக் கொடுக்கிறாள் கணவனுக்கு! அவன் உண்டு, மயங்கியவன்போல் மேலுக்குக் காட்டுகிறான். மனைவி கணவனைத் தூக்கிக் கட்டிலில் போட்டு உடை உடுத்து முகம் திருத்தி, கரும்பட்டால் முக்காடிட்டு மாடிவிட்டு இறங்குகிறாள். இறங்குகையில் மேசையின் கீழே விழுந்து கிடக்கும் கடிதத்தையும் எடுத்துக் கொண்டு போகிறாள். அவள் வண்டியில் ஏறுகிறாள். வண்டி போகிறது. பெரிய பண்ணை யார் ஒரு கருப்புக் குதிரையில் ஏறி வண்டியின் பின்னோடு செல்லு கிறார்.

அவள் சின்ன பண்ணையாரின் கோடை விடுதியை அடைகிறாள். சின்ன பண்ணை எதிர்கொண்டழைத்துப் போகிறார். இதைப் பெரிய பண்ணையார் தொலைவிலிருந்து பார்த்துத் திரும்புகிறார். ஒளிந்து நின்று பார்த்திருக்கும் மண்ணாங்கட்டியும் மகிழ்ச்சியுடன் திரும்புகிறான்.

ஏரியின் மேற்கிலிருந்து ஒரு படை வந்து கொண்டிருக்கிறது. அப்படை சின்ன பண்ணையார் வீட்டை அடைகிறது. குதிரைகள் ஒருபுறம் கட்டப்படுகின்றன. பலர் இறங்குகிறார்கள்! மண்ணெண்ணெய் சின்ன பண்ணை வீட்டின் மேல் மழையாய்ப் பொழிகிறது! வீடு சிறிது நேரத்தில் தழலின் இடையே காட்சியளிக்கிறது. வந்த அயலூராார் குதிரை ஏறிப் பறந்து செல்லுகிறார்கள். செல்லுபவர் ஒருவரின் சுழல் துப்பாக்கி கீழே விழுகிறது. மண்ணாங்கட்டி அதை எடுத்துக்கொண்டு ஒருபுறம் மகிழ்ந்தோடி, ஏழை மக்கள் வீடுதோறும் புகுந்து புகுந்து வெளிவருகிறான்.

பொழுது விடிகிறது. சின்ன பண்ணையை அடுத்துள்ள ஏழை மக்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கிறது. நெல், கேழ்வரகு முதலிய மணிகளை அவர்கள் வேறிடங்கட்கு மாற்றுகிறார்கள். எரிவதை சிலர் அவித்துக் கொண்டிருக்கிறார்கள். குறைக் கொள்ளிகளை ஒருபுறம் சேர்க்கிறார்கள். அழகிய தட்டுமுட்டுக்களை அனுவாக்குகிறார்கள்.

சிலர் முறையாக நெல் முதலியவற்றை, ஏழை மக்களின் வீடுதோறும் நிரப்புகிறார்கள் கேட்பாரின்மையால்.

சின்ன பண்ணையாரும், அவர் மனைவியாரும் நேற்றிரவு சின்ன பண்ணையிடம் வந்த அழகு மங்கையும் [பெரிய பண்ணையார் மனைவி] ஒரே வண்டியில் ஏறிக்கொண்டு நகர்நோக்கிப் பயணப்படுகிறார்கள். மூவரும் ஏறிய வண்டியானது பெரிய பண்ணையார் வீட்டுத்தெருவில் போகிறது. பெரிய பண்ணையார் அவர்களைப் பார்த்து வயிற்றைப் பிசைகிறார். அவர் கண்கள் தீயைக் கக்குகின்றன. மண்ணாங்கட்டி மகிழ்ச்சியுடன் மறுபுறம் செல்லுகிறான்.

எரிந்துபோன பகுதிபோக எரியாதன அனைத்திலும் உள்ள பல பொருள்கள் ஏழை மக்கட்குக் கிடைக்கின்றன. அவர்கட்கு நிறையச் சோறு சமைக்கப்படுகிறது. காய்கறிகள் ஆக்கப்படுகின்றன. மண்ணாங்கட்டி அங்கு ஒருபுறமிருந்த நெய்க் குடத்தை, அடுப்பில் இருந்த இரும்புச் சட்டியில் தலைகீழ் ஊற்றி அதில் உளுத்த வடை தட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறான்.

பதினான்கு

மாலை இரண்டு மணிக்கு ஏரிக்கரை நண்பர்களை நோக்கி மண்ணாங்கட்டி செல்லுகிறான். அந்தக் குறவர் குடிசைகள் அதிரும்படி இரண்டு குறவர்கள் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மண்ணாங்கட்டி நடுங்குகிறான். அவர்களை நோக்கி ஓடுவதை மண்ணாங்கட்டி பார்க்கிறான். அவன் உள்ளமும் கைகால்களும் நடுங்குகின்றன. மண்டையுடைந்தோடும், அந்தக் குறவனைப் பின் பற்றி மண்ணாங்கட்டி ஓட முயல்கிறான். ஆயினும் குறவன் மறைந்து விடுகின்றான். மண்ணாங்கட்டி ஏரிக்கரையிலிருந்த ஓர் ஆலமரத்தின் மேல் ஏறி நடப்பதைப் பார்க்கும் கருத்தால் காத்திருக்கிறான். சிறிது நேரத்தில் பெரிய பண்ணையும், அவர் ஆட்கள் சிலரும் குறவர் குடிசையை நோக்கி வருகிறார்கள். குறவர்கள் பலர் பிள்ளை குட்டி களுடன் வீட்டைவிட்டு வெளிநோக்கி ஓடி மறைகிறார்கள். மண்டையை உடைத்த குறவன் தலையைத் துணியால் மறைத்துக் கொண்டு அச்சத்துடன் ஓடி மறைகிறான்.

பெரிய பண்ணையாரும் ஆட்களும் மண்டையுடைந்த குறவனும், குடிசைகளை அடைகிறார்கள். பல மண்வெட்டிகள், இருப்புப் பாரை கள், தோண்டி எடுக்கப்படுகின்றன. குடிசைகளிலும் மண்வெட்டிகள் எடுத்து ஒருபுறமாக வைக்கப்படுகின்றன. ஆட்கள் சிலர் குறவர் ஓடிய வழிநோக்கி விரைவாகச் செல்லுகிறார்கள். பெரிய பண்ணையார் வீடு நோக்கிச் செல்லுகிறார்.

பதினைந்து

இரவு பத்து மணியாகிறது பெரிய பண்ணையார் வீட்டு மணிப்பொறியில்! நகரத்தினின்று 100 குதிரைகள் பெரிய பண்ணையாரின் வீட்டை நோக்கி வருகின்றன. குதிரைகளினின்று இறங்கிய அரசினர் பெரிய பண்ணையாரை சூழ்ந்து கொள்ளு கிறார்கள். அவர் இரு காவலர்பால் ஒப்படைக்கப்படுகிறார். மற்றும் காவலர் பலரும், ஏழை மக்களின் வீட்டுக்கிருவர் விழுக்காடு சூழ்ந்து கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு குடும்பத்தின் தந்தை தாய் பிள்ளைகளும் ஒன்று சேர்த்துச் சங்கிலியால் பிணிக்கப்படுகிறார்கள். ஏழை மக்களின் குடும்பங்கள் அனைத்தும் பிணிக்கப்படுகின்றன. மண்ணாங்கட்டி கண்ணீர் விடுகிறான். ஒருபுறமாக ஓடுகிறான். வேறு புறமாக ஓடிவருகிறான்.

இதே நேரத்தில், மண்டையுடைந்த குறவனை இருவர் அவன் கைகளைக் கட்டியபடி பிடித்து வருகிறார்கள். ஊரில் காவலர் நிறைந்திருப்பதை அவர்கள் பார்க்கிறார்கள். ஆயினும் அவர்கள் அக்குறவனை ஊரில் அருகிலிருந்த மாந்தோப்பில் ஒரு மரத்தில் கட்டி விட்டுச் சிறிது தொலைவில் உட்காருகிறார்கள். சிறிது நேரத்தில் அவர்கள் உறங்கத் தொடங்குகிறார்கள். இதைக்கண்ட மண்ணாங் கட்டியின் முகம் துன்பக் கடலில் மூழ்குகிறது. அவன் தன் இடையில் இருந்த இறகு தாள் எடுத்து ஏதோ எழுதுகிறான். எழுதிய தாளோடு தான் எடுத்த சுழல் துப்பாக்கியையும் சேர்த்துக் கட்டுகிறான். பெரிய பண்ணையாரைச் சூழ்ந்திருந்த காவல் தலைவரின் எதிரில் விழும்படி அதைத் தொலைவிலிருந்து விட்டெறிகிறான்.

காவல் தலைவர் அதை ஆவலாய் எடுத்துப் பிரித்துப் பார்க்கிறார். சிறிது நேரத்தில் தலைவரும் ஏறக்குறைய இருபது காவலரும் குதிரை ஏறி ஏரிக்கரைக்கு அப்புறமுள்ள சிற்றூர் நோக்கிப் புறப்படு கிறார்கள்.

பதினாறு

நள்ளிருளில் மண்ணாங்கட்டி, தோப்பில் கட்டப்பட்டிருக்கும் குறவனைச் சுற்றிச் சுற்றி வருகிறான். குறவனைக் கட்டியவர்கள் உறங்குமிடத்தை நெருங்குகிறான். அவர்கள் நிலையை உற்றுப் பார்க் கிறான். விரைந்து வந்து கட்டப்பட்டிருக்கும் குறவனை அவிழ்க் கிறான். குறவன் விரைவாக ஓடி மறைகிறான். உறங்கியவர்கள் திடுக் கிட்டு விழிக்கிறார்கள். மாமரத்தை விரைவில் அடைகிறார்கள். மண் ணாங்கட்டியைப் பிடிக்கிறார்கள். கட்டி விடுகிறார்கள். மண்ணாங் கட்டி தாக்கப்படுகிறான்.

இரண்டு தடிகள் மாறி மாறி மண்ணாங்கட்டி மேல் பாய்கின்றன. அடிகள் நின்ற போதெல்லாம் அவன் விழிகள் ஏழை மக்களின் வீட்டை நோக்குகின்றன. அடிபடும் போதெல்லாம் அவனால் தலை தூக்க முடியாவிடினும் அவன் நெஞ்சம் சங்கிலியால் பிணிக்கப்பட்ட ஏழை மக்களின் நிலை என்ன என்று பார்க்கிறது. அடித்தவர்கள் சற்று தொலைவில் சென்று உட்காருகிறார்கள். இருள் நிறம் கட்டுக் குலைகிறது. கருநிற வானில் வெண்ணிறம் மிதக்கத் தொடங்குகிறது. சங்கிலியால் பிணிக்கப்பட்டுத் தத்தம் குடிசைக்கு நேரில் நிற்கும் ஏழை மக்களின் விழிகள் கோழியை மூடி வைத்துள்ள கூடையைப் பார்க்கின்றன. மீண்டும் அவ்விழிகள் தம் கைகள் விலங்கிடப் பட்டிருப்பதைப் பார்த்து நீர் சொரிகின்றன.

கிழக்கில் இளங்கதிர் தலை நீட்டுகின்றது. மண்ணாங்கட்டிக்குக் காவல் இருப்போர் கிழக்கே பார்க்கிறார்கள். அதே நேரத்தில் ஏரிக்குப் புறத்திலுள்ள சிற்றூருக்குச் சென்ற காவல் தலைவன், ஊரில் நுழைகிறான்.

மண்ணாங்கட்டியை நோக்கி விரைவாகக் கையில் தடியுடன் வருகிறார்கள் முன்னே அடித்தவர்கள்; மற்றும் வேலையைத் தொடங்குகிறார்கள். மண்ணாங்கட்டி விலங்கிடப்பட்ட மக்கள்பால் செலுத்திய ஆவல் முகம் திடுக்கென அதிர்கிறது. மண்ணாங்கட்டியின் உடலில் ஓங்கியடிக்கும் தடிகள், உடலிலேயே பதிகின்றன. அவன் தலையில் செந்நீர் அருவி இழிகின்றது. மண்ணாங்கட்டி ஆவலோடு ஏழை மக்களின் நிலையைப் பார்க்கிறான். அவன் கழுத்து, தலையைச் சுமக்க மறுத்துவிடுகிறது. தொங்குகின்ற தலையிலிருக்கும் விழிகள் ஏழை மக்களின் வீட்டை நோக்குகின்றன. மற்றோர் அடி. மண்ணாங்கட்டியின் தலை விழுகிறது.

வீடுதோறும் சங்கிலியாற் பிணித்து நிறுத்தப்பட்டிருந்த ஏழை மக்கட்கு மீட்சி கிடைக்கின்றது. காவலர்கள் அவர்களின் விலங்கு களை அகற்றுகின்றார்கள். விடுபட்ட ஏழை மக்கள் ஒன்று கூடுகின் றார்கள். அவர்கள் கண்கள் யாரையோ தேடுகின்றன. கூட்டம் அங்கு மிங்கும் போகின்றது. தோப்பை நோக்கி ஆவலாக அவர்கள் ஓடி வரு கிறார்கள். காலைக் கதிர் வெளிச்சம் காட்டுகின்றது.

தோள்மேல் விழுந்து கிடந்து, செங்குருதி ஒழுக விழிகள், விடுபட்ட மக்களை நோக்குகின்றன. மண்ணாங்கட்டியின் இதழ் விலகுகிறது. முத்துப்பற்கள் திகழ்கின்றன. வாய்க்கடையிற் சிரிப்பு மின்னுகிறது. கண்ணில் பெருமகிழ்ச்சி மலர்கிறது. அவன் தலை நிமிர்ந்தது! ஆயினும் பழையபடி வீழ்ந்தது. மக்கள் ஓடி மொய்த்துக் கட்டவிழ்த்தார்கள். அடித்தவர்கள் கண்களில் அச்சமும், வியப்பும் தோன்றுகின்றன. அவர்கள் கையுதறுகிறார்கள். மண்ணாங்கட்டியின் தலை மற்றொரு முறை நிமிருமா! இல்லை! அவன் நீண்ட அமைதி யில் நிலைத்துவிட்டான்.

ஏழை மக்கள் அள்ளி யணைத்த மண்ணாங்கட்டி பத்தரை மாற்றுப் பொன்னாங்கட்டி!

* * *

சாகித்திய அகாதமி,
தமிழ்ப்பல்கலைக்கழகம் தமிழக அரசு

பரிசு பெற்ற நூல்கள்

கம்பர் – டாக்டர் .சுப. மாணிக்கம்
பரிபாடல் திற - டாக்டர் இரா. சாரங்கபாணி
திருக்குறள் ச உறுதிப் பொருள் –
டாக்டர் சோ.ந. கந்தசாமி
தமிழ் மொழி வரலாறு – டாக்டர் சு. சக்திவேல்
தாகூர் – டாக்டர் ச. மெய்யப்பன்
மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும் –
டாக்டர் செ.வை. சண்முகம்
தொழுநோய் – டாக்டர் ஜி. செல்வராஜ்
வீரர் உலகம் – கி.வா. ஜகந்நாதன்
மணிக்கொடி காலம் – பி.எஸ். ராமையா
உரையாசிரியர்கள் – மு.வை. அரவிந்தன்
ஊருக்குள் ஒரு புரட்சி – சு. சமுத்திரம்
வேரில் பழுத்த பலா – சு. சமுத்திரம்
உலகப் பெருங்கவிஞர் கம்பர் – இரா.வ. கமலக்கண்ணன்
திருமுறையும் திருக்கோயில்களும் – புலவர் செந்துறைமுத்து
திருவருட்பாச் சிந்தனை – வெள்ளைவாரணனார்
சுற்றுலா வளர்ச்சி – வெ. கிருட்டிணசாமி
கலைவாணன் கவிதைகள் – அப்புலிங்கம்
இசையியல் – வெற்றிச் செல்வன்
தமிழகக் கலை வரலாறு – க.சி. கமலையா
வண்ணங்கள் வடிவங்கள் – தேனுகா
இலக்கண வரலாறு – இளங்குமரன்
கம்ப்யூட்டர் – வி. மோகனசுந்தரம்
தமிழ்நாட்டுச் சத்திரங்கள் – கு. தாமோதரன்
கல்லெழுத்துக் கலை – நடன காசிநாதன்
சிறுவர் நல்வழிப் பாடல்கள் – நாரா. நாச்சியப்பன்
இரணியூர்க் கோயில் – மா. சந்திரமூர்த்தி
தமிழ்நூல் தொகுப்புக் களஞ்சியம் – சுந்தர சண்முகனார்
இந்திய அரசமைப்பு – வே. தில்லைநாயகம்

வள்ளலார் வரிசை நூல்கள்

திருவருட்பா

அருட் பெருஞ்ஜோதி அகவல்

ஜீவகாருணிய ஒழுக்கம்

மனுமுறை கண்ட வாசகம்

திருவருட்பாச் சிந்தனை

அருட்பிரகாச வள்ளலார்

திருவருட்பா (கல்வெட்டுப் பாடல்கள்)

விண்ணப்பங்கள்

வள்ளலார் வாழ்வியல்

வள்ளலாரும் திருவள்ளுவரும்

வள்ளலாரும் திருஞானசம்பந்தரும்

வள்ளலாரும் நாவுக்கரசரும்

வள்ளலாரும் மாணிக்கவாசகரும்

வள்ளலாரும் தாயுமானவரும்

வள்ளலாரும் பாரதியாரும்

விஞ்ஞான அருளாளர் வள்ளலார்

வள்ளுவர் வழியில் வள்ளலார்

வள்ளலாரும் ராமகிருஷ்ணரும்

பதிப்புச் செம்மல்
டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் துணைப்பேராசிரியர். திருக்குறள்இயக்கம், திருமுறைஇயக்கம், தமிழிசைஇயக்கம், தமிழ்வழிகல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர். புலவர் குழு உறுப்பினர். பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார். பன்னிரண்டு நூல்களின் ஆசிரியர். இவர் *எழுதிய தாகூர் நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது.* தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மல். துறை தோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களை வெளியிடுவதை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். பதிப்புச்செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

பதிப்புச் செம்மல் பதிப்பித்த
பாரதிதாசன் நூல்கள்

பாரதிதாசன் கவிதைகள்
குடும்ப விளக்கு
பாண்டியன் பரிசு
அழகின் சிரிப்பு
தமிழியக்கம்
எதிர்பாராத முத்தம்
இளைஞர் இலக்கியம்
இருண்ட வீடு
இசையமுது
சேரதாண்டவம்
தமிழச்சியின் கத்தி
அமைதி
நல்லதீர்ப்பு
தேனருவி
காதல் நினைவுகள்
பாரதிதாசன் நாடகங்கள்
பிசிராந்தையார்
குறிஞ்சித்திட்டு
பெருமக்கள்
முல்லைக்காடு
கண்ணகி புரட்சிக் காப்பியம்
மணிமேகலை வெண்பா
காதலா கடமையா

T18
R004

Wrapper Printed at Ganesh Printing. Ms-1. Ph : 561039